www.padippakam.com

# சமூகப்பணி
# அ-சமூகப்பணி
# எதிர்-சமூகப்பணி

சஃபி & கோபிகிருஷ்ணன்

முன்றில் வெளியீடு



படிப்பகம

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சமூகப்பணி அ-சமூகப்பணி எதிர் - சமூகப்பணி

சஃபி & கோபிகிருஷ்ணன்
சஃபி & கோபிகிருஷ்ணன் ©

வெளியீடு :

மூன்றில்
கடை எண் 28
இரண்டாவது மாடி
சாந்தி காம்ப்ளெக்ஸ்
26/3 ரங்கநாதன் தெரு
தி. நகர்
சென்னை 600 017

முதல் பதிப்பு : டிசம்பர் 1992

முகப்போவியம் : எபினெஸர்

பக்கங்கள் : 52

விலை : ரூ. 12-00

அச்சிட்டோர் :
ஜனசக்தி அச்சகம்
161 பிரகாசம் சாலை
சென்னை 600 108

படிப்பகம்

www.padippakam.com

Soqial Work ASocial Work Anti-Social Work

Authors : SAFI & GOPIKRISHNAN

Published by :
Munril, Madras 600 017

First Edition: December 1992

Pages : 52

Price : Rs. 12-00

Cover Desisn : Ebenezer

printed at
Janasakthi Press
161 Prakasam Salai
Madras 600 108

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

செழியன் (Amnesty International)

லதா ராமகிருஷ்ணன்

பத்மினி கோபாலன்

எஸ். பாலகிருஷ்ணன்

உளநல மருத்துவ உளவியலாளர்
ஆகியோருக்கு

படிப்பகம்

www.padippakam.com

“அந்தக் குட்டிநாய் உன்னிடம் பிரியமாக நடந்து கொள்ளாதற்குக் காரணம், நீ அதனுடன் பிரியமாக நடந்து கொள்ளாததுதான்”

படிப்பகம்

www.padippakam.com

# சமூகப்பணி அ-சமூகப்பணி எதிர்-சமூகப்பணி

சமூகப் பணியாளர் என்ற பதவி வகிப்பதற்கு சமூகப் பணித் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்து துறையைச் சார்ந்தவர்களிடையே நிலவி வருகிறது. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு, அந்த நிலைதான் இது. காகிதக் கல்வித் தகுதிக்கு ஏனோ அவ்வளவு முக்கியத்துவம் !

நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகள் நிறைய பேர் இருக்க சமூகப்பணிப் பதவி சமூகப்பணித் துறை முதுகலைப் பட்டதாரிகளுக்கே கொடுக்கப்படுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடக் கூடாது என்கிற ஆதங்கம் சமூகப் பணித்துறை முதல்வர்களுக்கு இருப்பது தவறில்லை. முன்னுரிமை சமூகப்பணிப் பட்டதாரிகளுக்கே தரப்படுவதும் நடைமுறை உண்மை. ஆனால் சமூகப் பணியைத் துறையில் பட்டம் பெற்றவரால்தான் திறம்படச் செய்ய முடியும் என்ற கருத்துதான் ஏற்புடையதாக இல்லை. இந்தக் கருத்து ஒரு நியாயப்படுத்தலே தவிர நியாயம் அல்ல.

நம் காகிதக் கல்வித் தகுதிகளின் பேரழகுபற்றி ஓரளவு சொல்ல வேண்டும். எனக்குத் தெரிந்து ஓர் இளநிலை ஆய்வாளர் படிப்பு (M.Phil) படித்துக்கொண்டிருந்தவர் பிரகாரம் இனவிருத்தி என்ற சொல் வினைச் சொல். கவனியுங்கள். இவரது தாய்மொழி தமிழ்தான். அதேபோல



படிப்பகம்

M.Phil மாணவி (படிப்பைத் தமிழில் மேற்கொண்டிருந் தவர்) ஒருத்தி Colony-யை காலணி என்று எழுதுபவர். இருவரும் இப்பொழுது முனைவர் (PhD) பட்டப் படிப்பு மேற் கொண்டிருப்பார்கள்.

1989 ஆகஸ்ட் மாதத்தில் என் வீட்டின் அருகில் இருந்த தனியார் பல்மருத்துவமனையில் ஒரு சொத்தைப் பல்லை நீக்கிக்கொள்ளவும் பற்களைச் சுத்தம் செய்து கொள்ளவும் சென்றிருந்தேன். மருத்துவர் ஓர் இளம்பெண். பல்மருத்துவத்தில் இளநிலைப் பட்டம் (BDS) பெற்றவர். பற்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்த அவர் நடுநடுவில் Split, Split (பிளவுபடு) என்று சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு முதலில் புரியவில்லையாயினும் நிலைமையை ஊகிக்க முடிந்தது. மருத்துவர் சொல்ல நினைத்தது (Spit) (துப்புங்கள்) என்று. சிகிச்சை ஒருவாறு முடிந்தது. பற்கள் பராமரிப்பு பற்றி மருத்துவர் இலக்கணப் பிழைகள் நிறைந்த ஆங்கிலத்தில் சரளமான உரை ஒன்றை நிகழ்த்தினார். இறுதியில், அவர் பிரகாரம் பலமுறை பிளவுபட்டுச் சிதைந் திருந்த நான் மருத்துவக் கட்டணமாக நூறு ரூபாயைத் துக்கப்பட்டுக் கொடுத்தேன். தொகையைப் பெற்றுக் கொண்ட அவர் நலன் விசாரிக்கத் தொடங்கினார். நான் வேலை செய்யும் நிறுவனத்தார் எனக்கு மருத்துவ ஈட்டுத் தொகை தருகிறார்களா என்றும் தான் பெற்றுக் கொண்ட பணத்திற்கு ரசீது வேண்டுமா என்றும் கேட்டார். கொள்கைப் பிடிப்பு அடிப்படையில் நான் ஒரு நல்ல வேலையை உதறித் தள்ளிவிட்டு இப்பொழுது என் கோப்பான திருவோட்டில் சுய-தரவு படிவத்தையும் சான்றி தழ்களையும் ஏந்திக்கொண்டு சமூகப்பணி வேலை கிடைக்குமா என்று தொண்டு நிறுவனங்களில் ஏறி இறங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். அவர் ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்தினார். எனக்கும் அவரது தவறான ஆங்கிலத்தின்மீது அனுதாபம் தெரிவிக்கலாம் போலிருந்தது. துக்க விசாரிப்புகள் முடிந்து அவரிடமிருந்து மனச்சுமையுடன் விடை பெற்றேன்.

www.padippakam.com

அநேகமாக கல்விச் சான்றிதழ்கள் ஓரளவு திறமை உள்ளவர்களுக்கே வழங்கப்பட்டாலும் சராசரியை விடக் குறைந்த அளவு அறிவு படைத்தவர்கள்கூட உயர் பட்டங்களைப் பெற்றுவிடுகிறார்கள். உயர்பதவிகளையும் பெற்று விடுகிறார்கள். இவர்களால் தனித்து இயங்க முடிவதில்லை. தகுதி வாய்ந்த ஓர் உதவியாளரின் பின்புலம் இவர்களுக்குக் கிடைத்தாலொழிய இவர்கள் பாடு திண்டாட்டம்தான்.

இன்னொரு விஷயம் நினைவுக்கு வருகிறது. வாய்வழித் தேர்வு ஒன்றில் தெரிந்த மாணவர் ஒருவரிடம் தேர்வாளர் கேட்டார், 'எழுத்துத் தேர்வு எல்லாம் எப்படி எழுதியிருக்கிறாய்?' என்று. மாணவர் சுமாராகத்தான் செய்திருப்பதாகச் சொன்னார். தேர்வாளருக்கு இரக்கம் பீறிட்டது. தனக்குத் தெரிந்த மாணவர் தேர்வில் தவறிவிடக் கூடாதே என்று 90 மதிப்பெண்கள் வழங்கிவிட்டார். மாணவர் முதுகலைப் பட்டத்தில் தேறி இளநிலை ஆய்வுப் பட்டப் படிப்பை மேற்கொண்டார்.

1969 முதல் 1974 வரை முடநீக்கு இயல் துறையில் ஒரு புனர்வாழ்வுத் திட்டத்தில் தொழில் திறன் கணிப்பாளராகப் (உதவி உணவியலாளர்) பணிபுரிந்தேன். அப்பொழுது சமூகப் பணிமாணவர்கள் பயிற்சிக்காக எங்கள் மையத்துக்கு வருவதுண்டு. பயிற்சி முடிந்த தறுவாயில் ஒரு சமயம் நானும் உடன் பணிபுரிந்த சமூகப் பணியாளரும் மாணவர் ஒருவருக்கும் மாணவி ஒருத்திக்கும் வாய்வழித் தேர்வு நடத்தினோம். நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர்களால் சரிவர விடையளிக்க முடியவில்லை. 23, 28 மதிப்பெண்கள் வழங்கினோம். பிறகு எங்கள் செயல்திட்ட அதிகாரி "இது அவர்களது தேர்வைப் பாதிக்கும். பாஸ் மார்க் போட்டுவிடுங்கள்" என்று எங்களைக் கேட்டுக் கொள்ளவே நாங்களும் பாஸ் மார்க் போட்டு விட்டோம். இப்படித்தான் இருக்கிறது கல்வியின் நிலை. பேசாமல் பாதி பல்கலைக்கழகங்களை மூடிவிடலாம். மேநிலைப்பள்ளி வரை படிக்க வைத்து மொழிப் பயிற்சியை ஓராண்டு



படிப்பகம்

கொடுத்தாலே போதுமானது என்று நினைக்கத் தோன்றுகிறது. பரிசோதனைகளை உள்ளடக்கிய துறைகளில் மட்டும் குறுகிய காலப் பயிற்சி அளித்துவிட்டால் போதும். அறிவை விரிவுபடுத்திக் கொள்ள நூலகங்களையும் தரம் வாய்ந்த புத்தகக் கடைகளையும் நாடலாம். ''என்னத்துக்கு சவத்துக்கு அலங்காரம் பண்ணுன மாதிரி பி.ஏ.யும் எம்.ஏ.யும்?'' எனக்கு ''அம்மா வந்தாள்'' தான் நினைவுக்கு வருகிறது.

தொடர்பாக இன்னொரு நிகழ்ச்சியும் ஞாபகத்துக்கு வருகிறது. ஓர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் இலக்கியக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஒரு நீண்ட கட்டுரையை ஒரு நிறுவன இயக்குநர் வாசித்தார். மூன்று இடங்களில் சுந்தரம் ராமசாமி என்று வாசித்தார். வாசித்தவருக்கு சுந்தர ராமசாமியின் எழுத்துக்களின் பரிச்சயம் இருந்திருக்க வாய்ப்பில்லை. கட்டுரையையும் அவர் தயார் செய்யவில்லை. வேலைக்காகாத அசிரத்தையான ஓர் உதவியாளர் தயார் செய்து கொடுக்க உருளச்சு செய்த கட்டுரையை அழுத்தம் திருத்தமாக தவறுதலுடன் பிரமாதமாக வாசித்துவிட்டார் இயக்குநர். இத்தனைக்கும் பேச்சு முடிந்த பிறகு கைதட்டல் வேறு. அரசியல் கூட்டங்களுக்கு லாரி லாரியாக ஆட்களை வரவழைத்து நடுநடுவில் கைதட்டல் செய்ய வைக்கும் மலிவான உத்தி இலக்கியத்திலும் வந்துவிட்டிருக்கிறது. என்ன சொல்ல ?

ஒரு சிபாரிசுக் கடிதம் ஒரு தொண்டு நிறுவனத்துக்கு சக தொண்டு நிறுவனம் ஒன்றிலிருந்து வருகிறது. கை இழந்த ஒருவர் குடும்பத்துக்கு உதவுமாறு கோரி, அதில் He left his right hand in a car accident என்று கண்டிருக்கிறது. மோட்டார் வாகன விபத்து ஒன்றில் அவர் தன் வலது கையை இழந்தார் என்று அழகான ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சிபாரிசுக் கடிதத்தை எழுதியவர் முழு நீள முதுகலைப் பட்டம் பெற்ற, தகுதிபெற்ற சமூகப் பணியாளர் ஒருவர்.

அடுத்து, தாழ்வான பகுதியில் குடிசைகள் பாதிக்கப்

www.padippakam.com

பட்டதற்காக நிவாரணம் கோரி ஒரு தொண்டு நிறுவனத்துக்கு ஒரு கடிதம் வருகிறது. The huts in our area have been sabotaged by the recent floods. எழுதியவர் அந்தப் பகுதியில் ஒரு சமூகநல சங்கம் வைத்து அதன் கௌரவச் செயலராக இயங்கி வருகிறவர். இவர் ஒரு இளநிலைப் பொறியியல் பட்டதாரி. ஒரு நிறுவனத்தின் துணை இயக்குநர். இளைஞர்.

கல்வித் தகுதிகளை வழங்கும் துணை வேந்தர்களை நினைத்து ஒரு பாட்டம் அழுது தீர்த்துவிடலாம் போலத் தோன்றுகிறது. எந்த அடிப்படையில் தகுதிகள் வழங்கப் படுகின்றன என்பதே மர்மமாக இருக்கிறது. பொதுவாக தரம் தாழ்ந்த ஒரு கலாச்சாரம் உருவாகியுள்ளது.

மீண்டும் சமூகப்பணித் துறைக்கு வருகிறேன். ஓரளவு அடிப்படை உளவியல் பரிச்சயம் இருந்தாலே (நான் பட்டப் படிப்பைச் சொல்லவில்லை; அதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை) சமூகப்பணியை அழகாகச் செய்ய முடியும். சமூகப் பணிக்கு உண்மையான தேவைகள் உள்ளத்தில் சக மனிதனை உணரும் தன்மை, வாடிக்கையாளரின் (Client) துன்பத்தைத் தன் துன்பமாகப் பாவிக்கும் தன்மை, சக மனிதனைச் சகோதரனாக நேசித்தல், போதுமான அளவு சமூகப் பிரக்ஞை-இவ்வளவே, மேலும் வாழ்க்கையில் நிறைய அடிபட்ட ஒருவனால்தான் சமூகப்பணியை உண்மையாகச் செய்ய முடியும். பாதாம்கீரில் மிதந்து கொண்டு நாற்காலியில் சௌகரியமாக அமர்ந்துகொண்டு செய்யப்படும் பணிகள் (Arm chair Social Work) பணிகளே அல்ல. அவை வெறும் 'நான் உணர்வு' (ego) தான். மொத்தத்தில் சொல்லப்போனால் சமூகப்பணி இதயம் சார்ந்த ஒன்று. துறை சார்ந்த பட்டப்படிப்புக்கும் இதற்கும் பிரமாதமான சம்பந்தம் ஒன்றும் இல்லை.

மிக மிக முக்கியமான ஒரு விஷயம். கல்லூரியில் போதிக்கப்படும் சமூக அறிவியல் பாடங்கள் வாழ்க்கையைக் கலைச் சொற்களால் அலங்கரித்துப் பார்க்கின்றன. இந்தக்



படிப்பகம்

கலைச்சொற்களின் குறுக்கீடு இல்லாமலேயே வாழ்க்கை நடந்து கொண்டுதான் இருக்கிறது. உதாரணத்துக்கு மானுடவியலில் Tyknonomy என்ற ஒரு கலைச்சொல் இருக்கிறது. கணவனின் பெயரை மனைவி சொல்வ தில்லை என்பதை இச்சொல் குறிக்கிறது. இங்கு பெண் நிலை வாதம் அறியாத, பழைமையில் தோய்ந்த பெண் மணிகள் இந்த வார்த்தையை அறியாமலேயே கணவனின் பெயரைச் சொல்வதில்லை. இப்பொழுது இந்த வார்த்தையை அறிந்து கொள்வதன் மூலம் என்ன அறிவு வளர்ந்துவிட்டது ?

மேலும் இந்தக் கலைச் சொற்களின் உதவி இல்லாமலேயே சமூகப் பிரக்ஞை உள்ள ஒருவனால் வாழ்க்கையைப்பார்க்க முடியும். பட்டறிவும் வாழ்க்கையைப் பற்றிய ஒரு பரந்துபட்ட நோக்கும் சற்றே தத்துவார்த்த ரீதியான சாய்வும் சமூகச் சூழலை முழுமையாக உணர்ந்த நிலையும் போதுமானவை. காந்தி என்ன சமூகப்பணித் துறையில் முதுகலைப்பட்டமா பெற்றிருந்தார் ?

துறை சார்ந்தவர்கள் சமூகப்பணி, சமூக சேவை என்று வேறுபடுத்திப் பார்க்கிறார்கள். சமூகப்பணி என்பது தகுதி பெற்ற ஒருவரால் செய்யப்படும் தொழில் நுணுக்கப் பணி என்றும் தகுதி பெறாத பிறர் இதே பணியைச் செய்யும் போது மென் உணர்வு அடிப்படையில் செய்யப் படும் ஒரு சமூக சேவை அல்லது ஓர் உதவி என்றும் பிரித்துப் பார்க்கிறார்கள். இது வெறும் வார்த்தைகள் விளையாட்டுதான். டிசம்பர் '91ல் வீட்டை விட்டு ஓடிவந்த சிறுமி ஒருத்தியை ஒரு பெண்ணிய எழுத்தாளர் Juvenile Guidance Bureau வில் சேர்த்தார் தன் சொந்த முயற்சியில். இவர் சமூகப்பணிப் பட்டதாரி அல்ல. ஒரு சமூகப்பணியாளரும் இதையேதான் செய்திருப்பார். அப்படி யானால் கல்வித்தகுதி என்ற கேள்வி எங்கிருந்து எழுகிறது ?

தொழில் நுணுக்கத் துறைகளில் நிறைய நகைச் சுவைகள் நடந்ததுண்டு. முதல் உதாரணம்: சென்னையில் ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலைத்திறன் கணிப்புப்

www.padippakam.com

பரிசோதனைகள் (aptitude tests) மூலம் வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள். பரிசோதனைகளை நிகழ்த்த ஓர் உளவியலாளர் இருக்கிறார். சில வேளை உயர் அதிகாரிகளிடமிருந்து உளவியலாளருக்குத் தொலைபேசிச் செய்தி வருமாம் 'ஆளு நம்மாளு Fitncss போட்டிருங்க' என்று உளவியலாளரும் ஆள் வேலைக்குத் தகுதி என்று சான்றிதழ் வழங்கி விடுகிறார். உளவியல் பரிசோதனைகளே விளையாட்டுப் பொருட்கள் ஆகிவிடும் அவலம்.

இரண்டாவது உதாரணம்: 1930 என்று நினைக்கிறேன். ஒரு மருத்துவமனை "நீண்ட காலம் மருத்துவ மனையில் நோயாளிகளாக இருப்பவர்களைப் பற்றிய ஓர் ஆய்வு" Paramedidal research நடத்தியது. ஆய்வின் ஒரு முடிவு: சோதனைக்குட்படுத்தப்பட்ட நோயாளிகள் (Subjects) ஐம்பது பேரில் ஒருவர் சகநோயாளிகளுடன் அரட்டை அடிப்பதில் பொழுதைக் கழித்தார். ஆய்வு அறிக்கை இன்றும் காணக் கிடைக்கிறது. மேலை நாட்டுக் காரர் யாராவது அறிக்கையை வாசிக்க நேர்ந்தால் சிரித்தே விடுவார். இந்த மாதிரி வேலைக்காகாத ஆய்வுகளெல்லாம் சமூகப்பணித்துறையில் நிகழ்ந்துள்ளன. மேற்சொன்னபடி தரம் தாழ்ந்த ஒரு கலாச்சாரச் சூழல் உருவாகியுள்ளது.

சமூகப்பணியில் அறிவுரை வழங்குதல் (Connselling) என்று ஒன்று உண்டு. இதை நம் பாட்டிகள் வாழ்வனுபவ மூதிர்ச்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு மிகவும் அருமையாகவே செய்திருக்கிறார்கள். ஆனால் இன்று ஏனோ இது ஒரு தொழில் நுணுக்கக் (technical) கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுகிறது. அறிவுரை வழங்குவதற்குத் தெளிவான பார்வையும் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை ஆழமாகப் புரிந்துகொள்ளும் தன்மையும் இருந்தாலே போதுமானது. சமூகப்பணியாளரின் ஆளுமையின் குறுக்கீடு இல்லாமல் இது செய்யப்பட வேண்டும். இதற்கு மனப்பக்குவம் இருந்தாலே போதும். இந்த M. A., M. Phil., போன்ற பூச்சாண்டிகள் தேவை யில்லை.



படிப்பகம்

இந்த அறிவுரை வழங்குதல் முக்காலவாசி துறை சார்ந்த புத்தக அறிவுடன் வழங்கப்படுகிறது. அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இந்தமுறை மிகவும் குறுகலானது. இரண்டு ஜே. கிருஷ்ணமூர்த்தி புத்தகங்களையும் ஒரு Daie Carnegie-யையும் படித்திருந் தாலே பிரமாதமான அறிவுரைகளை வழங்கிவிடலாம். வாழ்க்கையைப் புரட்சிகரமாக மாற்றியுள்ள ஜே. கிருஷ்ண மூர்த்தியைவிட யார் உண்மையான சமூகப்பணி செய்திருக் கிறார்கள் ?

அறிவுரை வழங்கும் தருணத்தில் சமூகப்பணியாளரின் மனம் அன்பு என்னும் தத்துவத்தை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். சகமனிதனை ஆழமாக நேசித்தல் என்ற மனநிலை சமூகப்பணியாளரின் மனதில் ஏற்கனவே உருவாகியிருக்க வேண்டும். அறிவுரைகளின் உள்ளடக்கம் உளவியல், சமூகவியல், சமூகப்பணிப் பனுவல்களிலிருந்து பெறப்பெற்றவைகளாக மட்டும் இருந்தால் அது ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல மிகவும் குறுகிய வட்டத்துக்குள் ளேயே அடங்கிவிடும். அனைத்து மதங்களின் ஒரே சாராம்ச மான அன்பு என்னும் கொள்கை, Samuel Smiles, jae jab Non, Henry David Thoreau, Dostoyevsky, Khalil Gibran, Aldous Huxley, Klyde Klukhon, Ruth Benedict, Michmael Glenn, Margaret Mead, Helen Keller, Alexander Kuprin, எதிர்மறைச் சிந்தனையாளர் Richavrd Jeffekies, Carlo Levi, J Allen Boone, Hugh Prather, மூட நம்பிக்கைகளுக்கு சமாதி எழுப்பிய Abraham T Kovoor, Jean Paul Sartre, Pearl S Buck, Hermann Hess, Alan Dundes, David Werner (இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம்)—இவர்களுடைய புத்தகங் களிலிருந்து பெறப்பெற்ற கருத்துக்கள் The watercourse Way, The Knack of Selling Yourself போன்ற புத்தகங்களி லிருந்து கிடைக்கப்பெற்ற கருத்துக்கள் — இவைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். அப்படியானால் சமூகப்பணி யாளரின் புத்தக அறிவு எவ்வளவு பரந்துபட்டதாக இருக்கவேண்டும் !

முன் பத்தியில் சொல்லப்பட்ட அன்பு என்னும் தத்துவத்தைப் பற்றி மேலும் சில வார்த்தைகள். எனக்குக் கடந்த மூன்று ஆண்டு காலமாக ஒரு புனிதத் தல விஜயம் செய்யும் பாக்கியம் கிடைத்து வருகிறது. முழுநேர வேலை முடிந்ததும் மாலை பகுதி நேர வேலைக்குக் கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் சாலை வழியே செல்ல வேண்டும். சாலையில் ஓட்டல் பாரமவுண்ட் என்று ஓர் அசைவ உணவகம் உள்ளது. அதுதான் நான் குறிப்பிடும் புனிதத்தலம். அன்பு என்னும் தத்துவத்தை இவ்வுணவகம் எனக்குத் தினமும் புகட்டிவருகிறது. அகிம்சைக்கு நேர் எதிரியான அசைவ உணவகம் ஒரு புனிதத்தலமாக விளங்குவது முரணாகத் தோன்றினாலும் இந்த உணவகம் அன்பின் அடிப்படையில் இயங்கிவருவதை மறுக்கவியலாது. தினமும் மாலை ஐந்தேகால் மணி வாக்கில் அங்கு தேனீர் அருந்துவது என் வழக்கம். அங்குள்ள சிப்பந்திகள் புன்முறுவலுடன், மிகுந்த அக்கறையுடன் அங்கு வருகிறவர்களுக்கு உணவு பறிமாறுதல் செய்துவருகிறார்கள். நீலச் சீருடை தரித்த இவர்களின் வயது 25 முதல் 30க்குள் இருக்கும். அனைவரும் அன்புடன் நடந்துகொள்கிறார்கள். இருக்கையில் அமர்ந்ததும் கல்லாவில் உள்ளவரிடம் சிப்பந்தி மேசையின் இலக்கத்தைக் கூறி உரிய மின்விசிறியின் விசையை அழுத்தச் சொல்வார். இதமான காற்று சிப்பந்தி, 'டீயா சார்?' என்று நலன் விசாரிப்பார். தேனீர் வருவதற்குள் ஒரு பையன் ஒரு லோட்டா குளிர் நீர் கொண்டு வந்து வைப்பான். அவனிடம் தவறாமல் ஒரு புன்முறுவல் இருக்கும். நேரம் தாழ்த்தாமல் தேனீர் வரும். பொதுவாகத் தேனீர் அருந்துவதே ஓர் அன்னியோன்னியமான அனுபவம்தான். உதட்டுக்கும் தேனீர்க்கோப்பைக்கும் இடையே நிகழும் தொடுவுணர்வின் நெருக்கத்திலும் இதமான இளம் சூட்டுடன் உட்செல்லும் தேனீரின் உள்நோக்கிய பயணத்திலும் நிச்சயம் ஓர் இணக்கமான உறவு இருக்கத்தான் செய்கிறது. இந்த மனித திரவ உறவுச் சூழலினூடே, பரிமாறும் பணியை மேற்கொண்டுள்ள இந்த இனிய சிப்பந்திகளைப் பார்க்கும்

www.padippakam.com

போது இவர்களையெல்லாம் அன்பு என்னும் தத்துவத்தைப் பூடகமாகப் போதித்துக்கொண்டிருக்கும் மகான்களாகவே தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். புனிதம் என்னும் சொல்லின் பூரணத்துவத்தை இந்த உணவகத்தில் என்னால் முழுமையாக உணர முடிகிறது. ஏழே நிமிட அனுபவமானாலும் மாலையின் இனிய பொழுதுக்கு ஒரு கூடுதல் அழகை இந்த உணவகம் உருவாக்கித் தந்துவிடுகிறது.

துறை சார்ந்த பதவி சார்ந்த மமதையில் உதவி பெறுபவர்களைத் தாழ்ந்த தளத்தில் வைத்துப் பார்க்கும் உப்பரிகை உல்லாசிகளான நமது சமூகப்பணியாளர்கள் சாமானியர்களான இச்சிப்பந்திகள் போன்றவர்களிடமிருந்து நிறையவே கற்றுக்கொள்ளலாம். (இங்கு உப்பரிகைச் சமூகப்பணியாளர்கள் மட்டும்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். உண்மையான சமூகப்பணியாளர்கள் அல்ல.)

இந்த அறிவுரை வழங்குதலில் ஒரு முக்கிய அம்சம் குறிப்பிடத்தக்கது. வழங்கப்படும் அறிவுரை வாடிக்கையாளரின் ஆளுமையுடன் இயைந்ததாக இருக்க வேண்டும். ஆளுமைக்கு முற்றிலும் புறம்பான அறிவுரை எடுபடாது. அரிதுயில் நிலைச் சிகிச்சையில்கூட (Hypnotherapy) மருத்துவர் நோயாளியின் ஆளுமைக்கு முற்றிலும் புறம்பான கருத்தைப் புகுத்தியபோது நோயாளி துயிலிலிருந்து விடுபட்டு மருத்துவர் கன்னத்தில் அறைந்த ஒரு சம்பவத்தை ஓர் உளவியல் துணைப் பேராசிரியர் சொல்லியிருக்கிறார். அப்படியானால் வாடிக்கையாளரின் ஆளுமை குறித்தான முழுமையான பரிச்சயம் சமூகப்பணியாளருக்கு இருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது.

அறிவுரை ஏற்றுக்கொள்ளப்படுவதில் ஒரு சூட்சுமம் அடங்கியுள்ளது. சமூகப்பணியாளர் என்ற பதவி நிலை ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இது சமூக அந்தஸ்து சார்ந்த விஷயம். ஆனால் பதவிக்கு முக்கியத்துவம் கொடுத்தும் பழகிவிட்ட நம் மக்களிடையே இந்த அம்சமும் வேலைசெய்கிறது. சராசரி மக்கள் பிரகாரம் மருத்துவர்



படிப்பகம்

www.padippakam.com

உயிர் காக்கும் தெய்வம். இதே மனோபாவம்தான் சமூகப் பணியாளர் - வாடிக்கையாளர் உறவிலும் பிரதிபலிக்கப்படுகிறது. அப்படியானால் அறிவுரை வழங்குவது எவ்வளவு பொறுப்பானது ?

அறிவுரை வழங்கும்போது குரலின் தன்மை தணிவான நிலையில் இருக்க வேண்டும். ஓரளவு இனிமை கலந்ததாக இருக்க வேண்டும்

பாலியல் ரீதியான பிரச்சினைகள்குறித்தான ஆலோசனைகளை வழங்கும்போது, பிரச்சினை உள்ளவரைப் போதுமான அளவு ஆசுவாசப்படுத்தி அவரது மனதில் எந்தவிதக் குற்றவுணர்வையும் ஏற்படுத்தாத வண்ணமும் விரசமில்லாமலும் அறிவுரை வழங்க வேண்டும். பண்பாட்டையும் பாலியல் பிறழ்வுகளையும் சமூகப் பணியாளர் தன் மனதில்போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. உணர்வுபூர்வமான உண்மையான காதலோடு கணவன் அல்லாத பிற ஓர் ஆடவனுடன் பாலுறவுகொள்ளும் பெண்ணைச் சித்திரிக்கும் W. Somerset Maugham-இன் The Painted Veil-ஐ எப்படிப் புறக்கணிக்க முடியும்? Maugham-இன் இன்னொரு படைப்பான Rain பாதிரியார் ஒருவரின் பாலிச்சையைச் சாடுவதாக அமைகிறது. 'எல்லா ஆண்களும் பன்றிகள்' என்று ஒரு பரத்தை சொல்லும் வாசகத்துடன் முடியும் இந்த அருமையான படைப்பைத்தான் தூக்கி எறிய முடியுமா? Marie Corelli-யின் Open Confession from a Women to a Man நவீனத்தைத்தான் காற்றில் பறக்கவிட முடியுமா? சமூகப் பணியாளர்கள் ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். தேர்ந்த மனமுதிர்ச்சி கொண்டவர்கள் மட்டும்தான் சமூகப் பணி செய்ய முடியும்.

தாம்பத்திய உறவிலுள்ள சிக்கலைத் தீர்த்து வைக்க முயலும் சமூகப்பணியாளர் தொழில் நுணுக்கச் சூழலை உருவாக்கக் கூடாது. சமூகப் பணியாளர் மிகமிகக் கவனமாக இருக்க வேண்டும். ஆலோசனைகள் நட்புரீதியில்



படிப்பகம்

(rapport) எளிமையானவைகளாக இருக்க வேண்டும். அப்பொழுது மட்டும்தான் ஆலோசனைகள் எடுபடும். ஆணின் பக்கத்தையோ பெண்ணின் பக்கத்தையோ சார்ந்து நியாயப்படுத்தி ஆலோசனை வழங்கக்கூடாது. சமூகப் பணியாளர் தான் ஒரு நோக்கர், ஒரு நடுநிலைமையாளர் என்பதை ஒருபோதும் மறக்கக் கூடாது.

சமூகப்பணியாளர் ஓர் உயர்ந்த பீடத்திலும் வாடிக்கை யாளர் தாழ்ந்த தளத்திலும் இருக்கும் நிலை கொடுமை யானது. தந்த கோபுரத்தில் உட்கார்ந்து கொண்டெல்லாம் சமூகப்பணி (ivory tower social work) செய்ய முடியாது. சமூகப்பணியாளர் வாடிக்கையாளர் தளத்துக்கு இறங்கி வர வேண்டியது அவசியம்.

சொன்னாலும் செல்லாவிட்டாலும் சமூகப்பணியாளர் வாடிக்கையாளருடன் ஒப்பிடும்போது ஓர் உயர்ந்த நிலையிலேயே இருக்கிறார். இது குறிப்பாகப் பொருளுதவி வழங்கும் தொண்டு நிறுவனங்களுக்குப் பொருந்தும். இதனாலேயே ஒரு பண்ணைச்சீமான் மனப்பான்மையோ தன்னை மிகைப்படுத்தி உணரும் நிலையோ சமூகப்பணி யாளர் மனதில் உருவாக நிறையச் சாத்தியங்கள் உள்ளன. பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் சுய-விமரிசனத்துக்கு உட்படுத்திக்கொள்வதன் மூலமும் மனதைப் பக்குவப் படுத்திக்கொள்வதன் மூலமும் இந்தக் குறையைச் சமூகப் பணியாளர் தவிர்க்கலாம்.

நம் சூழலில் ஒரு சமூகப்பணியாளருக்கு எண்ணிறந்த வாடிக்கையாளர்கள் இருப்பதால் ஒவ்வொரு வாடிக்கை யாளரிடமும் தனிக் கவனம் செலுத்த இயலாமல் போகிறது. உண்மையான சமூகப்பணி, சமூகப்பணியாளர் வாடிக்கை யாளரின் சொந்த வாழ்க்கையில் நேரடியாகப் பங்கு கொள்வதில்தான் அடங்கியிருக்கிறது. முடிந்தால் வாடிக்கையாளரின் வீட்டில் குடிசையில் ஒரு வாரமாவது தங்கி இதைச் செய்ய வேண்டும். வெறும் களப்பணிகள் (Home Visits) ஓரளவுதான் பயனளிக்கும். சில சமயங்

www.padippakam.com

களில் களப்பணிகள் துறை சார்ந்த ஒரு சடங்கை நிகழ்த்தும் மனோபாவத்துடன் நிகழ்த்தப்படுபவை. இந்நிலை மாற வேண்டும். அதிக சமூகப்பணியாளர்களை நியமிக்கும் அளவுக்குப் போதிய பொருள்வசதி தொண்டு நிறுவனங்களிடம் இல்லாதது இதற்குக் காரணம்.

சமூகப்பணியாளருக்குப் பொருளாதாரப் பிரச்சினை இருக்கக்கூடாது. போதுமான அளவு சம்பளம் கொடுக்கப் பட வேண்டும். அப்பொழுதுதான் பணியில் உற்சாகம் இருக்கும்.

சமூகப்பணியாளர் ஒரு நிறுவனத்தைச் சார்ந்தவர். சுயமாகச் சில முடிவுகளை எடுக்க அவருக்குச் சில சமயங்களில் உரிமை இருப்பதில்லை. நிறுவனத்தை நடத்தும் நிர்வாகிகள் சமூகப்பணியாளருக்குப் போதுமான செயல் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் அளித்தாலொழிய சமூகப் பணி ஒரு குறுகிய வட்டத்துக்குள் முடிவடைந்துவிடும். நிர்வாகிகளின் போக்கு நிஜமான சமூகப்பணி நிகழ்த்த ஏதுவாக இருக்க வேண்டும். அதிக கெடுபிடி உள்ள நிறுவனங்கள் சமூகப்பணியாளரின் மன அமைதியைப் பாதித்துப் பணியிலுள்ள ஆர்வத்தைக் குறைத்துவிடும். தவிர, சமூகப் பணியாளருக்கு அனாவசிய மன இறுக்கமும் ஏற்படும். சமூகப்பணியாளர்கள் ஆசுவாச நிலையில் இருப்பது மிகவும் அவசியம்.

சமூகப்பணியாளருக்கு மொழித்திறன் மிகமிக அவ சியம் இத்திறன் இல்லாத எந்தவொரு சமூகப்பணியாளரும் தொழிலில் தோல்வியே காண்பார். ஆங்கிலப் பயிற்று மொழிக் கான்வென்ட் பாணி ஆங்கில வாடையடிக்கும் ஒயிலான தமிழெல்லாம் அரைகுறைப் படிப்புள்ள அல்லது படிப்பறிவே இல்லாத வாடிக்கையாளர்களை சமூகப் பணியாளரிடமிருந்து நிச்சயம் அந்நியப்படுத்தும். மேலும் மொழித்திறன் வாடிக்கையாளர்பற்றிய அறிக்கைகள் தயாரிப்பதில் பேருதவியாக இருக்கும். தவிர, அறிவுரை வழங்குவதிலும் மொழித்திறன் அவசியம் தேவை.



படிப்பகம்

www.padippakam.com

சமூகப்பணியாளர்—வாடிக்கையாளர் இருவருக்குமிடையே உள்ள சமூக இடைவெளி சிறிதளவுதான் இருக்க வேண்டும். லட்சியமான உறவு இந்தச் சிறிதளவு இடைவெளியும் இல்லாததாகவே இருக்கும்.

சமூகப்பணியாளரை வாடிக்கையாளர்கள் உயர் அதிகாரிகளாகவே நினைத்து இடைவெளிகளை வளர்த்துக் கொண்டு அனுகூலத்தைப் பெற மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் நிலை நம் சூழலில் சர்வ சகஜம். சமூகப் பணியாளரின் இரக்கத்தைத் தூண்டி அனுகூலம் பெற வாடிக்கையாளர் முயற்சி செய்வது வழக்கமாக நிகழும் ஒன்று. சிலவேளை வாடிக்கையாளர் பச்சையாகப் புளுகவும் கூடும். எது எப்படியிருந்தபோதிலும் சமூகப் பணியாளர் ஒரு நீதி போதகர் அல்ல. வாடிக்கையாளரின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது மட்டும் தான் சமூகப் பணியாளரின் கடமை. ஆகையால் ''நீங்கள் பொய் சொல்கிறீர்கள். உங்களுக்கு உதவி செய்ய மாட்டேன்'' என்று நிர்தாட்சண்யமாக மறுப்பது தவறாகும். மிகுந்த சௌஜன்யத்துடன் சமூகப்பணியின் கருத்தாக்கங்களை எடுத்துச்சொல்லி வாடிக்கையாளரை நெறிப்படுத்துவது சமூகப் பணியாளரின் கடமையாகும். நம் நாடு பொருளாதாரரீதியில் நலிந்த நாடு. நிறைய பேருக்குச் சமூகப்பணி உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனாலும் ஒரு குறிப்பிட்ட சமூக நல நிறுவனத்தின் கட்டுதிட்டங்களுக்குக் கீழ் ஒரு வாடிக்கையாளர் வரமுடியவில்லை என்றால் நேரடியாக உதவியை நிராகரிப்பது குற்றமாகும். வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் உதவி வேறு எந்தச் சமூக நல நிறுவனத்தில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து ஒரு சிபாரிசுக் கடிதம் (referral letter) கொடுப்பதுதான் பணியின் நியதி. ஆனால் சமூகப்பணியாளர்களுக்கு வேலை தலைக்கு மேல். இதற்கு நேரம் ஒதுக்குவது சிரமம். இருப்பினும் இதையும் மீறி இப்படிப்பட்ட உதவிகளைச் செய்தே ஆக வேண்டும்.

சிலவேளைகளில் முக்கியஸ்தர்களின் சிபாரிசுக் கடிதத்



படிப்பகம்

துடன் உதவிக்குத் தகுதிபெறாத வாடிக்கையாளர்கள் வருவதுண்டு. இது நம் நாட்டு நிலவரத்தின் தவிர்க்க வியலாத அம்சம். இவர்களை நிராகரிக்க வேண்டிய தர்ம சங்கடமான நிலையில் சமூகப்பணியாளர் இருக்கிறார். ஒரு தாட்சண்யத்துக்காகச் சமூகப்பணி செய்வது என்று ஆரம்பித்துவிட்டால் சமூகப்பணி என்ற கருத்தாக்கத்துக்கே களங்கம் வந்துவிடும். நேர்மையாக நிராகரிப்பதன் மூலம் சிபாரிசு செய்த முக்கியஸ்தரின் பொல்லாப்புக்குச் சமூகப் பணியாளர் உள்ளாக நேரிடலாம். சமூகப் பணி ஒரு பணயம் தான்.

சமூகப்பணியின் சில துறைகளில் பணய ஈட்டுத் தொகை சம்பளத்துடன் சேர்த்துக் கொடுக்கப்படுவது மனதுக்கு ஆறுதல் தரும் விஷயம். குறிப்பாக உளவியல் மருத்துவத்துறையில் இது இன்றியமையாததும் நியாயமானதுமாகும்.

இது தவிர, நம் நாட்டில எளிதில் கிடைக்கும் அனாதைச் சான்றிதழ்கள் போன்றவற்றைப் புலனாய்வு செய்யும் வேலையும் சமூகப்பணியாளருடையதே. உண்மை நிலையைக் கண்டறியக் களப்பணி செய்வது அவசியமாகிறது. சமூகப்பணியாளர் கட்டுறுதியான ஆளுமை படைத்தவராக இருக்க வேண்டியதும் இங்கு அவசியமாகிறது. தன் பொறுப்பு நிலைப்பாட்டிலிருந்து பிறழாதவராகவும் நியதிகளுடன் சமரசம் செய்து கொள்ளாத வராகவும் அவர் இருக்க வேண்டும். பணியை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு துணிச்சலுடன் செயல்படுபவராகவும் இருக்க வேண்டும். இதனால் தனிப்பட்ட முறையில் அவருக்குப் பாதிப்புகள் நிகழ வாய்ப்புகள் உள்ளன. சமூகப் பணி, இந்தக் கோணத்திலிருந்து நோக்கும்போது, மேற் சொன்னபடி ஒரு பணயம் ஆகிறது. பணியாளர் கோழை யாக இருக்கும் பட்சத்தில் நேர்மை அடிபட்டுப்போகும் என்பது ஒரு வெகு சாதாரண உண்மை.

மிகவும் மோசமான நிலை சமூகப்பணியாளருக்கு

உருவாகச் சாத்தியம் உண்டு. உயர்பதவியான ஒரு நிர்வாகிப் பதவி கிடைக்கும்போது இந்த விபத்து ஏற்படு கிறது. இந்த விபத்து ஏற்பட்ட தினம் சமூகப்பணியாளரின் மறைவு நாளாகும். இது தவிர்க்க இயலாதது. சமூகப்பணி யாளரும் மனிதர்தான். உயர் பதவி, கூடுதல் சம்பளம் கிடைத்தால் வேண்டாம் என்றா சொல்ல முடியும்?

சமூகப்பணி என்ற கருத்தாக்கம் அடிப்படையில் ஒரு பெரும் தவறை உள்ளடக்கியிருக்கிறது. இருத்தலியல் கோட் பாடுகளின்படி தனி மனிதனுக்குச் சுயமாகத் தன் விதியை நிர்ணயித்துக்கொள்ளும் உரிமை உண்டு. ஆனால் சமூகப்பணியில் பணியாளர் வாடிக்கையாளரின் விதியை நிர்ணயித்துக்கொண்டிருக்கிறார். இந்தப் போக்கு வாடிக்கையாளருக்கு என்னதான் நன்மையளித்தாலும் இதில் தனிமனித ஆளுமை நசிக்கப்பட்டு சமூகப்பணியாளர் வாடிக்கையாளர் மீது தன்னைத் திணித்துக்கொள்கிறார். இது நிச்சயம் மனித உரிமை மீறல்தான். ஆனால் வேறு மாற்று வழி இல்லை. ஏனென்றால் வாடிக்கையாளர்களுள் அநேகர் அறியாமையில் உழல்பவர்கள்.

அடுத்து சொல்லப்பட வேண்டியது முதலாளிகள் என்ற சுரண்டல் வர்க்கம்பற்றியது. புனர்வாழ்வு அடிப்படையில் வாடிக்கையாளர் ஒருவருக்கு வேலை வாங்கித் தரும் நிலையில், வேலை தரும் பண்ணைச்சீமான், வாடிக்கையாளர் ஏதோ ஒரு வகையில் ஊனமுற்றவர் என்பதைக் காரணம் காட்டி அதிக உழைப்பைச் சுரண்டி சம்பளத்தைக் குறைத்துக் கொடுக்கிறார். இது முதலாளிகள் அனாயாசமாகச் செய்யும் மானுடத் துரோகம். புகலிடம் என்று வந்தாலே ஓர் இளக்கார பாவமும் சுரண்டலும் தவிர்க்கவியலாதது. சமூக சிந்தனைகள் முற்றிலும் மாறுபட்டு ஆரோக்கியமான திசையில் திரும்பினாலொழிய இதற்கு விடிவு காலம் இருக்கப்போவதில்லை. "என்ன நானூறு ரூபா தர்றாங்களா? வாங்கிக்க. இந்தக் காலத்துல நானூறு ரூபா யார் தர்றாங்க?" என்பது நம் படித்த பாமர சமூகப்பணியாளர்களின் நா கூசாத அறிவுரை.

www.padippakam.com

இதே நானூறு ரூபாய்ச் சம்பளம் தனக்குக் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு வாழ்க்கையின் எந்தப் பகுதியைச் சிரைக்க முடியும் என்று இவர்கள் கேட்டுக்கொள்வதில்லை. இந்த உழைப்புச் சுரண்டலைத் தடுக்கவும் இவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லை. அப்படியானால் இப்படிப்பட்ட சமூகப்பணியாளர்கள் முதலாளிகளின் கைக்கூலிகளாகத்தான் இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிறைய பேருக்கு வேலை வாங்கித்தந்த சமூகப்பணியாளருக்கு ஆளுநர் விருது வழங்கும் சடங்கு என்னவோ விமரிசையாகத்தான் நடந்துவருகிறது. வேலை பெற்றவர்களின் சம்பளங்களைக் கூர்ந்து கவனித்தால் கௌரவம் பெற்ற சமூகப் பணியாளர் எவ்வளவு தூரம் இந்த விருதுக்குத் தகுதிபெற்றவர் என்பது எளிதில் புரிந்துவிடும். நாட்டில் நடைபெற்றுவரும் பாதி சமூகப்பணிகள் நாற்காலியில் அமர்ந்துகொண்டு நிகழ்த்தப்படும் charm air சமூகப் பணிகள் தாம். எல்லாம் துறை சார்ந்தவர்களின் கைங்கரியங்கள்.

சமூகப்பணியாளருக்குச் சார்புகள் இருக்கக் கூடாது. மனம் திறந்த நிலையில் இருக்கவேண்டும். தீவிர விருப்பு வெறுப்புகளும் இருக்கக்கூடாது. சடங்குகளைக்கட்டிக் கொண்டு அழுபவர்களாகவும் இவர்கள் இருக்கக் கூடாது. இதெல்லாம் லட்சிய நோக்கு. நடைமுறையில் எவ்வளவு பேர் இப்படி இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

சமூகப்பணியாளர்கள் அடிக்கடி சமூக விழிப்புணர்வுக் கூட்டங்களைப் பொது மக்களிடையே நடத்த வேண்டும். இவை அன்றாட வேலையைப் பாதிப்பதாலும் செலவு பிடிப்பதாலும் சாத்தியமாகாமலேயே போகின்றன. வருடம் ஒரு முறை நிகழ்த்தப்படும் விழிப்புணர்வு நாள்-வாரம் அநேக வேளைகளில் சடங்கார்த்தமாகவே முடிந்து விடுகிறது. மக்களுக்கு அதிகம் பயனளிப்பதில்லை. சமூகப் பணியாளரின் மனத்தில் ஏதோ ஒரு மூலையில் நிகழ்ச்சியை நடத்திவிட்ட திருப்தியோடு வைபவம் முடிவடைந்து



படிப்பகம்

விடுகிறது. வெகுஜனக் கலாச்சாரம் மக்களிடையே வேரூன்றியிருக்கிறது. இந்நிலை மாறத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விழிப்புணர்வு வாரங்களின் ஆயத்தக் கூட்டங்களில் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் (Showmanship) ஓரளவு உயர் பதவி வகிக்கும், அதிகமாகப் பேசி கூட்டத்தை ஆக்கிரமிக்கும் சமூகப் பணியாளரின் ஆலோசனைகள் எவ்வளவு மட்டமாக இருந்தபோதிலும் அவை ஏற்கப் படுவதையும், சற்றே அமைதியான, தாழ்ந்த பதவி வகுக்கும் சமூகப் பணியாளரின் ஆலோசனை கள் அறிவுபூர்வமாக இருப்பினும் எடுபடாமல் போவதும் கண்கூடாகக் காணலாம். நம் நாட்டில், படித்தவர்களும் பாமரர்களே என்பதைத்தான் இதெல்லாம் எடுத்துக் காட்டுகிறது. இப்படிப்பட்ட நிறைய மடத்தனமான ஆலோசனைகள் செயலாக்கம் பெற்றும்வருகின்றன. துறை சார்ந்தவர்கள் சிலவேளைகளில் கோமாளித்தனமாகத் தான் நடந்துவருகிறார்கள். அரசியல்வாதிகள் தங்கள் முழக்கங்களினால் இருக்கையைப் பிடிக்கிறார்கள். இதே கதைதான் இங்கும். ஏற்கனவே சொன்னதுபோல ஒரு பரிதாபகரமான தரம் தாழ்ந்த கலாச்சாரச் சூழல் உருவாகி யுள்ளது.

சமூக விழிப்புணர்வுக் கூட்டங்கள் வெற்றிபெறாமல் போவதற்கு முக்கியக் காரணம் வெகுஜனக் கலாச்சாரம் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் நம்மிடையே சராசரித் தமிழ்த் திரைப்படங்களை ஆழ்ந்து ரசிக்கும் திரைப்படத் திலகங்களின் நடிப்பைப் பாராட்டி விழா எடுக்கும் சமூகப் பணியாளர்களும் இருக்கிறார்கள். இவர்களே வெகுஜனக் கலாச்சாரத்தில்தான் மூழ்கியிருக்கிறார்கள். இவர்கள் இருக்கும் அழகில் இவர்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டங் களை நடத்த அருகதை இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. தவிர, சராசரிக் குடும்ப ஸ்திரி மனப்பான்மை கொண்டவர்களும் சமூகப் பணியாளர்களாக இருக்கிறார்கள். எல்லாம் துறைசார்ந்த பெருந்தகைகள் தரம். இவர்களால்

www.padippakam.com

சமூக சிந்தனைகளில் என்ன ஆரோக்கியமான மாறுதல் களைக் கொண்டுவர முடியும்? வேஷ்டி மறைந்துபோய் பெண்ட்ஸ் வந்துவிட்டது. புடவை களைந்தெறியப்பட்டு சூரிதார் அணியப்படுகிறது. ஆனால் கண்ணோட்டம் இன்னும் பழைமை சார்ந்ததாகவே இருக்கிறது. மடிசஞ்சிக் கலாச்சாரமும் உச்சிக்குடிமிக் கலாச்சாரமும்தான் நடை முறையில் காணப்படுகின்றன.

தமிழ்நாடு வாலுண்டரி ஹெல்த் அசோஸியேஷன் 30-11-91 அன்று பிற சமூகநல நிறுவனங்களுடன் சேர்ந்து உலக எய்ட்ஸ் தினம் நடத்தியது. கருத்தரங்கு எழும்பூர் பாந்தியன்சாலையில் உள்ள இன்டர்-சர்ச் சர்வீஸ் ஏஜன்ஸியில் மதியம் மூன்று மணி அளவில் தொடங்கியது. முதலில் இறை வணக்கப் பாட பாடப்பட வேண்டுமாம். பாட ஆள் கிடைக்காத பெரும் மனச்சுமையுடன் கருத்தரங்கு நடைபெற்று முடிந்தது. இந்த இறைவணக்கம், மெழுகுவத்தி ஏற்றுதல், குத்துவிளக்கு ஏற்றுதல் போன்ற மூடப்பழக்கங்களே இன்னும் மறைந்த பாடில்லை. முற்போக்குச் சிந்தனைகள்பற்றிப் பேசச் சமூகப்பணியாளர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அதுவும் முழுக்க முழுக்கப் பாலுறவு சம்பந்தப்பட்ட ஒரு கருத்தரங்குக்கு ஓர் இறைவன் தேவைப்பட்டது மிகவும் கேலிக்கூத்தான விஷயம்தான்.

9-9-91 அன்று மாலை ஆறு மணி அளவில் திருவல்லிக்கேணி படேல் ஸ்கொயரில் மத நல்லிணக்கக் கூட்டம் ஒன்றை மகளிர் அணி ஒன்று நடத்தியது. பேசியவர்கள் பெண்கள். பெரும் புள்ளிகள். மகளிர் அணி என்பதாலும் எனவே ஆண் வாடையே அடிக்கக்கூடாது என்பதாலும் ஆண் பேச்சாளர்கள் தவிர்க்கப்பட்டனர். ஆனால் ஒருமைபாட்டுப் பாடல்களில் மட்டும் பாட்டிசைக்கப் பக்க உதவியாக இரண்டு ஆண்கள் இந்த அணிக்குத் தேவைப்பட்டது. இந்த இரு ஆண்களின் குறுக்கீட்டால் மகளிர் அணியின் தூய்மை பரிதாபமாக மாசுபடுத்தப் பட்டது பாவம்தான். ஆனால் உரை நிகழ்த்திய எந்தப்



படிப்பகம்

பெண் அறிவாளியும் மதம் என்பதே குப்பை, கடவுள் என்பதே ஓர் எண்ணம் போன்ற முற்போக்கான சிந்தனைகளை முன்வைக்கவில்லை. எல்லா மதத்தினரும் சகோதரர்கள், சகோதரிகள், ஒன்று விட்ட மைத்துனர்கள் போன்ற பழைய குப்பையையே கிளறிக்கொண்டிருந்தார்கள். ஏழரை மணிவரை மகா எரிச்சலுடன் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த நான் இனியும் தாங்காது இந்த நாராசம் என்ற முடிவுடன் எழுந்து நடந்தேன். இன்னுமொரு அழகையும் சொல்ல வேண்டும். காவலுக்கு வந்திருந்த இரண்டு காவல்துறைப் பெண் அதிகாரிகள் சாலையில் இருந்த நகைக்கடையில் போய் அமர்ந்து கொண்டார்கள்.

உண்மையிலேயே இவையெல்லாம் விழிப்புணர்வுக் கூட்டங்களே அல்ல. பச்சையான புளுகுமூட்டைகள், போலித்தனங்கள், கதாகாலட்சேபம் போன்ற இழவெடுப்புகள். மீண்டும் அதையேதான் சொல்லவேண்டியிருக்கிறது. பொதுவாக நாட்டில் ஒரு தரம் தாழ்ந்த கலாச்சாரச் சூழல் உருவாகியுள்ளது. முற்போக்குச் சிந்தனைகள் குறுகிய வட்டமான இலக்கியவாதிகளிடையே மட்டும் நிலவி வருகின்றன. இவர்களுடைய பங்களிப்புடன் விழிப் புணர்வுக் கூட்டங்கள் நடைபெற்றாலொழிய இந்தக் கூட்டங்களெல்லாம் துறை சார்ந்த சடங்குகளாகத்தான் இருக்கும்.

சமீபத்தில் (1991-ல்; நாள் சரியாக நினைவில்லை) ஓர் அமெரிக்கப் பெண்மணியைச் சந்தித்தேன். அவர் ஒரு சமூகப்பணியாளர். கலைச்சொற்களின் தொந்தரவு இல்லாமலேயே, உளவியல் பின்புலம் இல்லாமலேயே, (நான் இவரிடம் பேசிப்பார்த்ததில் இவர் Sigmund Freud—யையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டதாகவே தெரிய வில்லை) இயல்பாக வெறும் உணர்வுகள் (sheer instincts) அடிப்படையில் அருமையாகத் தன் countyயில்சமூகப் பணியைச் செய்துகொண்டிருக்கிறார். இவரிடம் நான் கண்ட ஒரே குறை மதத்தைச் சமூகப்பணியுடன்

இணைத்துக்கொண்டிருந்ததுதான். விடைபெற்றுக் கொள்ளும் தறுவாயில் 'அமெரிக்காவிலுள்ள மிச்சிகனில் நடைபெற்றுவரும் லூதரன் சமூக சேவைகள்' என்ற புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். புத்தகத்தின் அட்டையில் 'மாதா கோவில் சேவை செய்யவில்லையென்றால் வேறு யார் செய்வார்கள் என்று கேட்டும் 'யேசு கிறிஸ்துவின் அன்பை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறோம்' என்று விளம்பரப்படுத்தியும் இருந்தது. படுஎரிச்சலாக இருந்தது. விருந்தினரை அவமதிப்பது நம் பண்பாடு அல்ல என்பதால் நான் இதுகுறித்து அவரிடம் ஒன்றும் பேசவில்லை.

மதங்களின் பெயர்கள் தாங்கிய சமூகநல நிறுவனங்கள் நம் நாட்டில் நிறையவே விரவிக்கிடக்கின்றன. சமூகப் பணியைத் தொழில் நுணுக்கப் பணி என்று மார்தட்டிக் கொண்டிருக்கும் துறையைச் சார்ந்தவர்கள் இந்த மாதிரியான குறுகலான வட்டப் பணிக்கு என்ன நிவர்த்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? ஏற்கனவே நம் கடவுள்கள் மக்களைக் குழுக்களாகப் பிரித்து நிறையவே புண்ணியம் கட்டிக்கொண்டிருக்கின்றன. இம்மாதிரிப் பணிகள் (மேற்சொன்ன மிச்சிகன் அம்மையார் உட்பட) வெறும் சார்பையும் சார்பு சார்ந்த மென்உணர்வையும், பாமரத்தனத்தையும்தான் வெளிப்படுத்துகின்றன. இவையெல்லாம் சமூகப்பணியே அல்ல. பகிரங்கமான மதப் பிரசாரம், கதாகாலட்சேபம். ஒரு கடவுளின் நாமத்தை வாடிக்கையாளரின் நெற்றியில் பொறித்துத்தான் சமூகப் பணி நடக்குமென்றால் அப்பணி நடவாமலே போகட்டும். ஒரு பக்கம் ஒருமைப்பாடு முழக்கங்கள். ஒரு பக்கம் பிரிவினைவாத அடிப்படையில் மதம் தாங்கிய சமூகப் பணிகள். இந்நிலை மக்களைத் தெளிவுப்பாதையில் இட்டுச் செல்வதற்குப் பதிலாகக் குழப்பத்தில்தான் ஆழ்த்தும். இச்சூழல் முற்றிலும் அழிந்தாலொழிய விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்த எந்தவொரு சமூகநல நிறுவனமும் தகுதி பெறாது. இன்றைக்கு நடப்பதெல்லாம் கல்வித்தகுதி

பெற்ற பாமரர்கள் அது பெறாத பாமரர்களுக்குப் போதனை வழங்கிக் கொண்டிருப்பதுதான். இது வெறும் ஒரு சமூகக் கேளிக்கை, விபரீதமான ஒரு சமூக விளையாட்டு.

சமூகப்பணி என்பது கிட்டத்தட்ட ஒரு ஜீவ மரணப் போராட்டம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்தது. மிகவும் காத்திரமான பணி இது. பொழுதுபோக்காகவெல்லாம் நிச்சயம் இதைச் செய்ய முடியாது. அர்ப்பணிப்பு மனோ பாவம் இல்லாமல் செய்யப்படும் சமூகப்பணி பயனளிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் இது அடிப்படையில் போலி யானது. திரைப்பட நடிகை ஒருத்தி கைத்தறிப் புடவை தரித்து எளிமையான கோலத்தில் ஒரு விளக்குமாறைக் கையில் ஒயிலாகப் பிடித்துக்கொண்டு சேரியின் தரையை விளக்குமாறின் செயல்நுனி தொடுமாறு வைத்துக்கொண்டு புகைப்படத்துக்கு முகம் காண்பிப்பது போலத்தான் இதெல்லாம். இதற்குப் பேசாமலேயே இருக்கலாம்.

வாடிக்கையாளரைச் சகமனிதர் என்று உணர்வது மிக மிக அவசியம். வாடிக்கையாளர் சமூகப்பணியாளர் நிகழ்த்தும் மானுடப் பரிசோதனைகளின் பண்டம் அல்ல. சமூகப்பணியாளர்போலவே வாடிக்கையாளரும் ரத்தமும் சதையும் உணர்வும் கொண்ட ஒரு மனிதர், சகமனிதர். தன் சோதனா முயற்சிகளை வாடிக்கையாளர் மீது திணிப்பது ஒரு மானுடத்துரோகத்தனமாகும். இங்கு எவனும் கொம்பன் இல்லை. எல்லோரும் அடிப்படையில் மனிதர்கள்தாம். ஒரே மாதிரியான வாழ்க்கைதான் எல்லோருடையதும். ஓரளவு வசதி படைத்த சமூகப்பணியாளரிடம் கார்ட்ரெஜ் கட்டில் இருந்தால் நலிந்த நிலையில் இருக்கும் வாடிக்கையாளரிடம் நைந்துபோன பாய் இருக்கிறது. ஆனால் இருவரும் எப்படியோ நிம்மதியாகத் தூங்கிக்கொண்டுதான் இருக் கிறார்கள். இருவரும் அடிப்படையில் மனிதர்கள்தாம்.

என்னதான் இன்றைய சூழலில் சமூகப்பணி முக்கிய மானது என்றாலும் அதை உயர்த்திப் பேசுவதோ romanticise செய்வதோ மடத்தனமானவை. பிற துறை களும் தன் பங்குக்கு சமூகத்துக்கு நேரடியாகவோ மறைமுக

மாகவோ உதவிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆகையால் அவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் ஒன்றே ஒன்று மட்டும் எல்லாமே ஆகிவிட முடியாது.

ஒரு துறையைச் சார்ந்தவர் அந்தத் துறையில் மட்டும் வல்லவராக (?) இருக்கிறார். மேலும், சமூகப்பணித் துறையில் பிரிவுகள் உள்ளன. ஒரு பிரிவைச் சார்ந்தவர் அந்தப் பிரிவில் மட்டும்தான் பணிபுரியத் தகுதிபெற்றவராக இருக்கிறார். சில சமூகப்பணியாளர்கள் மனநலக் காப்பகத்துக்கு வருவதற்கும் மனநோயாளிகளுடன் பேசுவதற்கும் பயப்படுகிறார்கள். இவர்களுக்கு மனநோய் என்ற கருத்தாக்கம் சரிவரத் தெரியாமல் இருக்கிறது. தவிர உளவியல் மருத்லுவக்துறையில் பணிபுரியும் சமூகப்பணியாளர்களுள் பலர் எதிர் உளவியல் மருத்துவக் கருத்தாக்கங்களைக் கண்டுகொள்ளாமல் சம்பிரதாய ரீதியில் செயல்படுகிறவர்களாகவே இருக்கிறார்கள். இதனாலேயே மனித உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருவரை 'குணமடைந்த மனநோயாளி' என்று விவரிப்பதே ஒரு பெயர்ப்பலகை குத்துதல் (labeling) தான். எதிர்-உளவியல் மருத்துவக் கருத்தாக்கங்கள் இதுபோன்ற வெளிப்பாடுகளை வன்மையாகச் சாடுகின்றன. ஆனால் நம் சூழலிலோ இவ்வெளிப்பாடுகளெல்லாம் சர்வ சகஜம். குறிப்பிடப்படுபவரின் மனம் எவ்வளவு புண்படும் என்பது இவர்களுக்குப் புரியவில்லையோ என்ன இழவோ தெரியவில்லை. மனநலக் காப்பகத்தில் ஓரளவு தெளிந்த நிலையில் இருக்கும் நபர் உண்மையிலேயே ஒரு சிறந்த கவிதையை எழுதிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இதைப் பார்க்கும் சமூகப்பணியாளர் செய்வதெல்லாம் அவர் அந்த நபரின் கோப்பில் 'நோயாளி எழுதும் நடத்தையில் ஈடுபட்டுள்ளார்' (The patient is engaged in writing behaviour) என்று குறிப்பெழுதி வைத்துத் தன் துறை சார்ந்த சடங்கை முடித்துக் கொள்வதுதான். கவிதையின்

உன்னதத்தைப் பற்றி சிறிதும் அக்கறை கொள்வதில்லை நம் பெருமதிப்பிற்குரிய சமூகப் பணியாளர். இதனால்தான் சமூகப்பணி அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை என்று நினைக்கத்தோன்றுகிறது. சமூகப்பணியாளர் நோயாளிக்குச் சம அந்தஸ்து கொடுக்காத வரை இந்நிலை மாறப் போவதில்லை.

நம் சமூகம் நாளைய விடியலில் புத்துணர்வு பெற்று ஆரோக்கிய நிலைக்கு வந்துவிடப் போவதில்லை. ஆகையால் இருக்கும் சீர்கேடடைந்த சூழலிலேயே ஒரு பிரச்சினையைப் பார்ப்போம். உளவியல் மருத்துவம் என்று வரும்போது, தன் குமுறல்களைச் சமூகப்பணியாளரிடம் கொட்டி முடித்த பிற்பாடு மனச்சுமை இறங்கிய ஆசுவாச நிலை பிணியாளருக்குக் கிடைக்கிறது. இதே நிலை ஒரு கிறித்துவப் பாதிரியாரிடம் தான் செய்த 'தவறு' களைக் கொட்டி முடித்த பின்பும் கிடைக்கக்கூடிய ஒன்றே. இதை மதம் Confession என்று பெயரிட்டழைத்தாலும் இதுவும் ஒருவகை உளவியல் சிகிச்சை முறைதான். பாதிரியார் கர்த்தரின் நாமத்தால் பாவமன்னிப்பு என்னும் உளநல மாத்திரைகளைத் தருகிறார். விளைவு ஒரே மாதிரியாக இருக்கும்போது பாதிரியாரையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். சில மன நோய்கள் தாயத்துகளைக் கட்டும் பூசாரிகளால் ஓரளவாவது மட்டுப்படுவதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். தாயத்து ஓர் உளவியல் தாங்கியாகச் (psychological prhp) செயல்படுகிறது. நம்பிக்கை மூலம் குணமாதல் இதனால்தான் சாத்தியப்படுகிறது. ஆனால் இதற்கு எல்லைகள் உண்டு. தவிர, இந்த முறையில் கடவுள்தான் ஒரே தீர்வு என்ற மதப்பித்து (hyper religiosity) என்ற நோய்க்குறி தோன்றும் அபாயம் நிச்சயம் உள்ளது. கடவுளை எந்த அளவுக்குத் தன் அனுகூலத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது என்ற தெளிவு பிணியாளருக்கு ஏற்பட்டாலொழிய இந்த அபாயத்திலிருந்து தப்பிக்க இயலாது. சுவாதீனமானர்களிடையே கூட கடவுள் ஒரு போதைதான். பக்திப் பரவசத்துக்கும் விஸ்கிப் பரவசத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

உளவியல் மருத்துவ சமூகப்பணிபற்றி மேலும் சில விஷயங்கள். ஆக்கபூர்வமான இலக்கியப் பரிச்சயத்தை வாடிக்கையாளருக்கு ஏற்படுத்தித் தர சமூகப்பணியாள ருக்குத் தெரிந்திருக்க வேண்டும், மனநிலை பிறழ்ந்து சற்றுத் தேறிய நிலையில் உள்ள படிப்பறிவுள்ள நபரின் கவனக் குவிப்பு இலக்கியத்தின் மீது ஏற்படும்போது நோய்க்குறிகள் தணிவான நிலைக்குத் தள்ளப்படும் சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன.

எந்தக் கட்டத்திலும் வாடிக்கையாளரின் செழுமையான பொருளாதார நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு பொருள்ரீதியான அனுகூலங்களைப் பிரதி உபகாரமாகப் 'பரிசுகள்' என்ற போர்வையில் சமூகப் பணியாளர் பெறுவது மகாக் கேவலமான செயலாகும். சமூகப்பணி என்ற கௌரவமான சொல்லுக்குப் பங்கம் விளைவிக்கும் செயல் இது. (இதைத் தனியார் துறை உளவியல் மருத்துவ மனைகளுடன் இணைத்துப் பார்த்துப் புரிந்துகொள்ளப் படுதல் வேண்டும்). லேசான சமரசங்கள் பரவாயில்லை. (நாட்குறிப்பு, மலிவான இனிப்புகள் 'என் பெண் எட்டாவது தேறிவிட்டாள்' என்று நீட்டப்படும் சாக்கலேட் போன்றவை) போன்ற எளிமையான பரிசுகள பரவாயில்லை. இவைகூடத் தோழமையை (rapport) வளர்க்கப் பயன்படும் என்பதால் தான். மற்றபடி சமூகப்பணிச் சித்தாந்தங்களுக்குப் புறம்பாக ஏற்றுக்கொள்ளப்படும் விலையுயர்ந்த பரிசுகள் நிச்சயம் கொள்கை ரீதியான பரத்தமைதான்.

பால்ரீதியில் வறண்ட நிலையில் இருக்கும் எதிர்பாலின வாடிக்கையாளர்மீது பால்ரீதியான சுதந்திரங்களை எடுத்துக் கொள்ளும் (Sexpioitation) சமூகப் பணியாளர் நிச்சயம் ஒரு சுரண்டல்காரர்தான். கண்ணியமான ஆளுமைகளால் மட்டும்தான் உண்மையான சமூகப்பணியைச் செய்ய முடியும். (இதையும் தனியார் துறை உளவியல் மருத்துவ மனைகளுடன் இணைத்துப் பார்த்துப் புரிந்து கொள்ளப் படுதல் வேண்டும்).

www.padippakam.com

உளவியல் மருத்துவத்துறையில் பணிபுரியும் சமூகப் பணியாளர் உளநல மருந்துகள் வேலை செய்யும் விதத்தைப் புரிந்து கொண்டவராக இருக்க வேண்டும். இதற்காக உளவியல் மருத்துவ நூல்களைப் பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லது நேரம் கிடைக்கும்போதெல்லாம் உளவியல் மருத்துவரிடமே நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் தணியாத ஆர்வம் இருந்தாலொழிய இது சாத்திய மில்லை. நூல்களைப் படிப்பதைவிட மருத்துவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது; ஏனென்றால் மருத்துவ நூல்களில் மருந்துகளின் வர்த்தகப் பெயர்கள் கொடுக்கப்படாமல் இருக்கலாம். சற்றுத் தெளிந்த நிலையில் இருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மருந்துகள் எந்த அளவில் பயன்படும் என்பதை விரிவாக எடுத்துக் கூறுவது சமூகப் பணியாளரின் பொறுப்பாகும். முன்னேறிக்கொண்டிருக்கும் அறிவியல் துறையின் சமீபத்திய புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளும் ஆர்வமும் தன் அறிவைத் தற்கால அளவுக்கு உயர்த்திக் கொள்ளும் உற்சாகமும் கொண்ட வராக அவசியம் இருக்க வேண்டும். இவ்வாறில்லாத பட்சத்தில் ஒரு கட்டத்தில் அறிவுத் தேக்கம் ஏற்படும் நிலை உருவாகும். வளர்ச்சி மட்டுப்படும். பணித்திறன் குறையும். பணியில் கிடைக்கும் ஆத்ம திருப்தியும் போகப் போக அஸ்தமித்துக் கொண்டுவரும். பிறகு சமூகப்பணியாளர் ஒரு குமாஸ்தா நிலைக்குப் பரிதாபகரமாகத் தள்ளப்பட்டு விடுவார். இந்நிலை உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில் நேர்மை யுடன் தன் இயலாமையை ஏற்றுக்கொண்டு கண்ணியத் துடன் வேலையைத் துறந்துதான் ஆகவேண்டும். கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காகவெல்லாம் சமூகப்பணி செய்வது என்று ஆகும் நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

சில வாடிக்கையாளர்களின் உறவினர்கள் எந்த நோய்க்காக நோயாளிக்கு மருந்து கொடுக்கப்படுகிறது என்று தெரியாமலேயே பூசாரியிடம் விபூதிப் பிரசாதம் வாங்கிக்



படிப்பகம்

கொள்வதுபோல் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வழக்கமாக வந்து மருத்துவரிடம் மருந்துச் சீட்டைப் புதுப்பித்துப் பெற்றுச் செல்பவர்களாக இருக்கலாம். அவர்களைத் தனியே அழைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறுப்பும் சமூகப்பணியாளருடையது.

போதிய படிப்பறிவில்லாத பாமரத்தனமான சமூக சேவகி ஒருவர் (இப்படி நம் நாட்டில் இருக்கிறார்கள். சமூக சேவகி என்று முத்திரை குத்திக்கொள்வதில் ஒரு 'நான்' உருவாகிறது. இதனாலேயே இப்படிப்பட்ட சமூக சேவகிகள் நாட்டில் உருவாகியிருக்கிறார்கள்) தன் மகனை சிகிச்சை பெற்று வரும் ஒரு மனநோயாளிப் பெண்ணுக்கு மணமுடித்து வைக்க முன்வரும்போது, அவரை உபசரித்து அமரச் சொல்லி, முதலில் அவரது தொண்டு உள்ளத்தைப் பாராட்டிவிட்டு, பிறகு மனநோய் பாரம்பரியத்தைப் பாதிக்கும் விஷயம் என்பதைத் தெளிவுபடுத்தி அவரது அறியாமையை அகற்றச் சமூகப்பணியாளர் உதவவேண்டும்.

உளவியல் மருத்துவத்துறையில் பணிபுரியும் சமூகப் பணியாளரின் பொறுப்பு சற்றே கூடுதலானதுகூட. பணியாளருக்குத் துணிச்சல் அவசியம். உதாரணமாக, நோயாளி ஒருவரின் உறவினர் உளவியல் மருத்துவரின் நடத்தை குறித்தோ கண்ணோட்டம் குறித்தோ எதிர்மறையான விமரிசனத்தை முன்வைக்கும்போது, தைரியமாக மருத்துவரிடம் சென்று அவரது கவனத்துக்கு இந்த விமரிசனத்தைக் கொண்டுவர வேண்டும்.

மிகவும் சிக்கலான சூழல்தான். புரிகிறது. ஆனாலும் சமூகப் பணியாளர் இதைச் செய்யும் கடப்பாடு உடையவராக இருக்கிறார். உளவியல் மருத்துவர் தரும் பாதுகாப்பு உணர்வில் குளிர்காயும் நடுத்தர வர்க்க பூர்ஷுவா மன நிலையிலிருந்து முற்றாக விடுபட்ட சமூகப் பணியாளரால் மட்டும்தான் இது சாத்தியம். சமூகப்பணி சொந்தமுறையிலான ஒரு பணயம் என்பதை இங்கு நினைவுக்குக்கொண்டு வருவது பொருத்தமானதாக இருக்கும்.

நோயாளியின் படிப்பறிவு கொண்ட ஓர் உறவினர் முழுக்க முழுக்க மருத்துவ ரீதியான ஒரு சந்தேகத்தை முன் வைக்கும் போது, சமூகப்பணியாளர் தன்னால் இயன்றால் தீர்த்து வைக்கவேண்டும். போதிய மருத்துவ அறிவு இல்லாத பட்சத்தில் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு இதை நோயாளியின் உறவினரிடம் சொல்லித் தெளிவுபடுத்த வேண்டும். இதுவும் சமூகப் பணியாளரின் பொறுப்புகளுள் ஒன்று.

சமூகப்பணியாளர் சாய்வுகள் அற்றவராக இருத்தல் வேண்டும். பொருளாதார அளவில் கொழுத்த நோயாளிக்குப் பிரத்தியேக முன்னுரிமை கொடுப்பதும் நலிந்த நிலையில் உள்ள நோயாளிக்கு இரண்டாம் பட்ச நிலை கொடுப்பதும் கூடாது. வர்க்க சாய்வுகள் அற்ற சமத்துவ நிலையில் சமூகப் பணியாளர் செயல்பட வேண்டும்.

மனநோயின் உக்கிரத்தில் நோயாளியிடமிருந்து சில வேளைகளில் கிடைக்கும் அடிஉதைகளைப் பெறவும் சமூகப் பணியாளர் சித்தமாக இருக்க வேண்டும்.

குழுச்சிகிச்சையை நடத்தும்போது சுதந்திரமாகப் பேச நோயாளிகளுக்கு முழு வாய்ப்பையும் அளிக்க வேண்டும். உண்மையான கருத்துப் பரிமாற்றங்களை ஊக்குவிக்க வேண்டும். தான் பிரதான அங்கத்தை வகிக்க வேண்டும் என்ற ஆதிக்க நிலையை எடுத்துக்கொள்ளாமல் நோயாளிகளுக்கு ஓர் எளிய வழிகாட்டியாக இருக்க வேண்டும். எந்தக் கட்டத்திலும் குழுச் சிகிச்சையை நகைச் சுவைகளைப் பரிமாறிக்கொள்ளும் கேலிக்கூத்தாக ஆக்கிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சமூகப்பணியாளர் துறை சார்ந்த பிற பணியாளர்கள் மீது காழ்ப்பு கொண்டவராக இருத்தல் கூடாது. தான் பெரியவரா மனநல உளவியலாளர் பெரியவரா போன்ற 'நான் உணர்வு' அடிப்படையிலான சண்டைகளைப் (Professional rivalries) போடாதவராக இருத்தல் வேண்டும். இந்தச் சண்டைபோடும் சமூகப் பணியாளரின்

www.padippakam.com

நடத்தையும் முப்பத்தேழு வயது நிரம்பிய ஒரு குறிப்பிட்ட வகை மனநோயினால் பீடிக்கப்பட்டு, இன்னும் குழந்தைத் தனமான ''வலிமையில் சிங்கம் பெரிதா புலி பெரிதா?'' என்று கேட்கும் மனநோயாளியின் நடத்தையும் ஒன்றே. ஒரு வித வித்தியாசமும் இல்லை.

மனவளர்ச்சி குன்றிய நிலையில் இருக்கும் ஒருவரை மனநோய்க்குறிகளுக்கான சிகிச்சைக்கு உளவியல் மருத்துவமனைக்கு அழைத்து வரும் உறவினர்களிடம் ''மனநோய்க்குறிகள் மட்டும்தான் உளவியல் மருத்துவச் சிகிச்சை மூலம் மட்டுப்படும். மனவளர்ச்சி குன்றிய நிலையை அகற்றாது'' என்ற உண்மையை நேர்மையுடன் எடுத்துச் சொல்லும் பண்பும் சமூகப்பணியாளருக்கு வேண்டும். உறவினர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக ''சீக்கிரம் பையன் தேறிவிடுவான் பொறுப்பை எங்களிடம் விடுங்கள்'' என்றெல்லாம் பொய் சொல்லக்கூடாது.

உறவினரிடம் ''சரியாக 1-1-93க்குள் தங்கள் துணைவி யார் மனநோயிலிருந்து முற்றாக குணமடைந்து விடுவார்'' போன்ற துல்லியமான (இது ஒரு பசப்பல்) பொய்மை நிறைந்த உறுதிமொழிகள் போன்றவற்றை சமூகப்பணி யாளர் அளிக்கக்கூடாது.

நோயாளியின், மெத்தப் படித்த அரசு உயர் பதவி வகிக்கும் உறவினர் நோயாளிகுறித்தான வாழ்க்கைச் சரிதத்தைத் தர ஒத்துழைக்காத பட்சத்தில் (உயர் கல்வியும் அரசு உயர் பதவி யும் பணக்கொழுப்பும் அவருக்குத் தோரணையையும் சமூகப் பணியாளரைத் துச்சமாக மதிக்கும் மனப்போக்கையும் டுெத்திருக்கின்றன. பாரதத்தின் தவிர்க்கவியலாத சாபக் கேடுகள் இவர்கள்) அவரை மனப்பூர்வமாக மன்னித்து வாழ்க்கைச் சரிதத்தின் முக்கியத்துவத்தைச் சமூகப்பணி யாளர் எடுத்துக் கூறவேண்டும். அப்பொழுதும் ஒத்துழைக் காத பட்சத்தில் விஷயத்தை உளவியல் மருத்துவரின்



படிப்பகம்

கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். பிறகு மருத்துவரின் ஆலோசனைப்படிச் சமூகப்பணியாளர் நடந்துகொள்ள வேண்டும்.

மனமுதிர்ச்சி அற்ற பணக்காரர்கள் (மனமுதிர்ச்சி அற்ற வர்கள் மட்டும்தான்) தங்கள் கற்பனைக்குப் பின்னால் நாயாக அலைந்து கொண்டிருப்பவர்கள். சிறு துக்கத் துக்குக் கூட வருத்தமுறி மாத்திரைகளை நாடி உளவியல் மருத்துவமனைக்கு வருகிறார்கள். இது இவர்களுக்குப் பிடித்தமான ஒரு பொழுதுபோக்கு; இன்றைய ஒரு fad. இவர்களிடம் "ஆளுமை ரப்பர் போன்றது, இறுக்கமான நிலையிலிருந்து சுயமாக, புறஉதவி இல்லாமல் இயல்பான தன்மைக்குத் திரும்பும் தன்மை கொண்டது. காரணரீதியாக ஏற்படும் லேசான துக்கத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி ஆளுமைக்குள்ளேயே உட்பொதிந்திருக் கிறது" என்பதை அம்சமாக எடுத்துக்கூற வேண்டிய பொறுப்பு சமூகப்பணியாளரைச் சாரும். வேண்டுமானால் லேசான உளவியல் ஆலோசனைகளை வழங்கி உதவலாம். அதற்குமேல் ஒன்றும் செய்யக்கூடாது. உளவியல் மருத்துவப் பலனைப் பணத்தைக் கொண்டு விலைக்கு வாங்கும் இந்தப் பெரிய மனிதர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தச் சமூகப் பணியாளர் கடமைப்பட்டுள்ளார். சமூகப்பணியாளர் உளவியல் மருத்துவருக்குப் பணம் சம்பாதித்துத் தரும் கருவி அல்ல.

தனி நபர் மனித உரிமைகள் பற்றிய ஆழ்ந்த பிரக்ஞை கொண்டவராகச் சமூகப் பணியாளர் இருக்க வேண்டும். ஓர் உதாரணம் இதைத் தெளிவுபடுத்த உதவலாம். சமூகப் பணியாளரின் பணி நேரம் மாலை 5-30-யிலிருந்து 8-00 மணிவரை என்று வைத்துக்கொள்வோம். நிறைய நோயாளிகள் இருக்கும்போது 8-00, 9-30 மணிவரைகூட வேலை செய்யலாம். நோயாளிகள் இல்லாத நேரத்தில் சீக்கிரமே வீட்டுக்குப் போக அவருக்குச் சுதந்திரம் உண்டு. ஒரு நாள் நோயாளிகளே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது பார்த்து, ஆகாய விமானம்

மூலம் பறந்துவரும் அளவுக்கு வசதி படைத்த நோயாளி யின் உறவினர் தன் சௌகரியத்துக்கு 7-30 மணிக்குத்தான் வருவார்; அவரிடமிருந்து நோயாளியின் வாழ்க்கைச் சரிதத்தைப் பதிவு செய்து கொள்ளுங்கள் என்ற தாக்கீது உளவியல் மருத்துவரிடமிருந்து வரும்போது ''என்னால் காத்திருத்தலில் இரண்டு மணி நேரத்தை விரயமாக்க முடியாது. அந்தப் பெரிய மனிதரை நாளை மாலை 5-30க்கு வரச் சொல்லுங்கள். என் சொந்த நேரத்தின்மீது சுதந்திரம் எடுத்துக் கொள்ளாதீர்கள்'' என்று திட்டவட்ட மாகக் கூற வேண்டும். அதையும் மீறி, உளவியல் மருத்துவர் சமூகப்பணியாளர்மீது தன்னைத் திணித்துக் கொள்பவராக இருந்தால், நோயாளியின் பணக்கார உறவினரைத் திருப்திபடுத்தச் சமூகப்பணியாளரைப் பலிகடாவாக்கும் எண்ணம் படைத்தவராக இருந்தால் அவருக்குக் கீழ் பணிபுரிய மறுத்து வேலையை அந்தக் கணமே துறக்கத் தயார் நிலையில் இருக்க வேண்டும். பணி யின் எந்தக் கட்டத்திலும் தன் கௌரவத்தை விட்டுக் கொடுப்பவராக இருக்கக்கூடாது. சமூகப்பணியாளர் யாருக்கும் தாழ்ந்தவர் அல்ல. தவிர, சமூகப்பணி ஒரு மலிவான பணியும் அல்ல. தனியார் துறை உளவியல் மருத்துவமனைக்கு வரும் அநேகர் மேல் மத்திய தர அல்லது பணக்கார வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களிடம் வாகன வசதி உண்டு. நேரமும் கையில் கனத்துக் கிடக்கிறது. இன்றில்லையேல் அடுத்த நாள் அவர்களால் வர நிச்சயம் முடியும். சமூகப்பணியாளர் நிச்சயம் பணக்காரர்களின் சௌகரியத்துக்கு வளைந்து கொடுக்கும் ஒரு பொம்மை அல்ல.

இன்னுமொரு விஷயம். பாட்டி சில மாதங்களில் மண்டையைப் போட்டுவிடுவார். பேத்திக்கு வயது 27; இரு பட்டங்களைப் பெற்று உயர் பதவியில் இருப்பவள். அவளுக்குத் திருமணத்தில் நாட்டம் இல்லை. பாட்டிக்கோ தான் கண் மூடுவதற்கு முன் தன் பேத்திக்குத் திருமண சுபகாரியம் (பேத்தியின் கன்னி கழிந்தே தீரவேண்டும்

என்ற தணியாத தாபம்) நடைபெற வேண்டும் என்ற 'நல்ல' எண்ணம். உளவியல் சிகிச்சை மூலம் பேத்திக்குத் திருமணத்தில் ஈடுபாடு ஏற்படுத்த முடியுமா என்ற பேராவலுடன் சமூகப்பணியாளரைப் பாட்டி அணுகலாம். "இன்றைய சூழலில் தனியொருத்தி ஆணின் துணையில்லாமல் தனித்து கண்ணியமுடன் வாழமுடியும்; திருமணம் என்பது வற்புறுத்தப்பட வேண்டிய செயலல்ல. பெண்ணுக்குத் திருமணம் செய்துகொள்ளவோ திருமணத்தை நிராகரிக்கவோ தனிநபர் உரிமை உண்டு; பாலுணர்வு இச்சைகள் சடங்கார்த்தமாகத் தணியவேண்டிய அவசியம் இல்லை; உடலுக்கென்றே ஒரு நியாயம் உள்ளது; இச்சைகள் கனவுகள் மூலமோ ஆளுமையின் நுட்பமான உத்திகள் மூலமோ தணிய வாய்ப்புண்டு; பேத்தியின் திருமண வைபவத்தைக் கண்டுகளிப்பதும் தனக்குப் பிடித்தமான சம்பூர்ணராமாயணம் திரைப்படத்தைக் கண்டு களிப்பதும் ஒன்றல்ல. முற்றிலும் இருவேறு விமரிசைகள்" என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறி, அமைதிப்படுத்தி, பாட்டியை வீடு திரும்ப வைக்க வேண்டிய பொறுப்பும் சமூகப்பணியாளரைச் சார்ந்ததே. தவிர இந்த ஆண்மைக் குறைவு, பெண்மைக் குறைவு எல்லாம் உளவியல் மருத்துவம் மூலம் சுலபத்தில் தீர்வதில்லை என்பதையும் சொல்லி அனுப்ப வேண்டும். "தாம்பத்தியக் களிப்பை அதிகரித்துக்கொள்ளுங்கள்; திருமணத்துக்கு முன்போ பின்போ வந்து ஆலோசனை பெறுங்கள்; குழந்தைப்பேறு அற்றவர்களும் ஆலோசனை பெறலாம்; கே. வி. குப்தா, ஜே. எல். குப்தா, 3 அண்ணாசாலை, (எல்லிஸ் சாலை,) சென்னை 600 002 போன்ற விளம்பரங்களைப் பேருந்துகளில் பார்த்திருக்கிறேன். இவர்கள் மருத்துவர்களா பாலியல் குறைகளை இவர்கள் உண்மையிலேயே தீர்த்து வைக்கிறார்களா என்றெல்லாம் தெரியவில்லை. நோயாளி என்ற போர்வையில் போய் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க ஆசைதான். நேரம்தான் கிடைக்கவில்லை.

உளவியல் மருத்துவத்திலும் பிழைகள் உள்ளன. தார்மீக ஆவேசத்தைக்கூட keyed up state என்று பெயர்ப்பலகை

www.padippakam.com

குத்திச் சிகிச்சைக்கு உட்படுத்தும் அதி உற்சாக உளவியல் மருத்துவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த ஆவேசக்காரர்மீது உளவியல் மருத்துவம் திணிக்கப் படுகிறது. இது ஓர் அறிவியல் கொடுமை. தார்மீகக் கோபத்துக்கும் சுவாதீனமற்ற கோபத்துக்கும் உள்ள வேறு பாடுகூட மருத்துவருக்குத் தெரியாமல் போவது பரிதாபமே. உளவியல் மருத்துவர்பிரகாரம் மருத்துவமனைக்கு வருபவர்கள், மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படு பவர்கள் அனைவரும் மனநோயாளிகளே. இதையெல்லாம் எதிர்-உளவியல் மருத்துவம் கண்டிக்கிறது. இந்த மாதிரிச் சமயங்களில் சமூகப்பணியாளரின் நிலை தர்மசங்கடமானது.

மனநோயாளிகள்குறித்த சட்ட நுணுக்கங்களைத் தெரிந்துவைத்துக்கொள்ளும் கடமையும் சமூகப்பணி யாளருக்கு உண்டு. இதற்கு மருத்துவ (Jurisprudence) புத்தகங்களையும் குற்றவியல் புத்தகங்களையும் பரிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும். வாசிப்பதற்கு நேரம் இல்லை என்ற சிக்கல் நேரும்போது சட்ட நுணுக்க நிபுணத்துவம் வாய்க்கப்பெற்ற நண்பர் ஒருவரின் உதவியை நாடக் கூசக் கூடாது. எல்லாமேயா ஒருவருக்குத் தெரிந்து விடும்? தெரியாத விவரங்களைத் தெரிந்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது ஒன்றும் கௌரவக் குறைச்சல் ஆகிவிடாது.

நோயாளிக்குத் தன் பிரச்சினைகள்குறித்தான உள்ளுணர்வு ஏற்பட்டாலொழிய பூரண குணம் அடைவது சாத்தியமில்லை என்பதைச் சமூகப்பணியாளர் தெளிவு படுத்த வேண்டும். இந்த உள்ளுணர்வை ஏற்படுத்த ஆலோசனைகள் மூலம் நோயாளிக்குச் சமூகப்பணியாளர் உதவவேண்டும். உடன் பணிபுரியும் உளநல மருத்துவ உளவியலாளருடன் முடிந்தபோதெல்லாம் இதுகுறித்துக் கலந்தாலோசிக்க வேண்டும்.

எந்தக் காரணம் கொண்டும் ''மனைவி ஒரு தீராத (chronic) மனநோயாளி; இதன் அடிப்படையில் ஒரு மருத்துவச் சான்றிதழ் வழங்குங்கள்; என் மனைவியை



படிப்பகம்

www.padippakam.com

மணவிலக்கு செய்துவிட்டு மறுமணம் செய்துகொள்கிறேன்; உதவுங்கள்'' என்று வேண்டிக்கொள்ளும் ஆண் ஆதிக்கச் செயல்வீரரை ஊக்குவிக்கக்கூடாது. ''மருத்துவமனை உறவுகளில் சமூகத்தை ஏற்படுத்தத்தான் இருக்கிறது. முறிப்பதற்கு அல்ல'' என்ற உண்மையைக் குரலில் சற்றுக் கடுமையை வரவழைத்துக் கொண்டு சொல்லி உடனடியாக அவரை மருத்துவமனையை விட்டு அகற்ற ஆவன செய்ய வேண்டும். இவரே மனநோயாளி ஆகும்போது மனைவி இவரை நிராகரித்தால் எத்தனை துயரத்துக்கு ஆளாவார் என்பதையும் இந்தப் பெருமதிப்பிற்குரிய ஆண்மகனுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அந்தச் சமயத்தில் மட்டும் 'பண்பாடு' என்ற உயர்வழக்குச் சொல்லைச் சுமத்திப் பெண்ணை மனநோயாளிக் கணவனுடன் வாழவைப்பதில் இந்தச் சமூகம் மிகமிகப் பிரியம் கொண்டதாக இருக்கிறது. இந்த ஒரு விஷயம் போதும், பாரதம் எவ்வளவு கேவலமான பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள.

சமூகப்பணியாளர் வலிந்து வாடிக்கையாளருக்கு உதவ முன்வருபவராக இருக்க வேண்டும். இதற்கு உண்மையான தொண்டு உள்ளம் தேவை. அர்ப்பணிப்பு உள்ளம் இல்லாத எவரும் பொருத்தமான கல்வித்தகுதி பெற்றிருந்தாலும் சமூகப்பணியின் விளிம்பில்கூடக் காலடி எடுத்துவைக்கக் கூடாது.

சமூகப்பணியைப் பணி நேரத்தில் மட்டும்தான் செய்ய வேண்டும் என்று எந்தச் சாஸ்திரமும் சொல்லவில்லை. சமூகப்பணி ஒரு சர்வகாலப் பணி. நிறுவனத்துக்கு வெளியிலும் பணியைத் தொடரலாம்: தவறில்லை.

எக்காரணத்தைக்கொண்டும் வாடிக்கையாளருக்கு செயல் திட்டத்தில் (Projeet) முறைப்படி கிடைக்கவிருக்கும் அனுகூலங்களின் குறுக்கே சமூகப்பணியாளரின் தனி நபர் ஆளுமை நிற்கக்கூடாது. இதைச் சற்றே விளக்குவது நல்லது. ஏதோ ஒரு கட்டத்தில் வாடிக்கையாளர் சமூகப்பணி



படிப்பகம்

யாளரைத் திட்டுகிறார் என்று வைத்துக்கொள்வோம். இதை மனதில் கொண்டு மறுதாக்குதலுக்கான தருணத்தை எதிர் பார்க்கும் பழி உணர்ச்சியை அறவே மனத்திலிருந்து அகற்ற வேண்டும். சமூகப்பணி சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது. இதெல்லாம் கற்பனையல்ல. இப்படி யெல்லாம் துறையில் நடந்துள்ளன.

தமிழகத்தில் பணிபுரியும் சமூகப்பணியாளர்களுக்குத் தமிழ் இலக்கியப் பரிச்சயம் இருப்பது அவசியம். பணியின் பல கட்டங்களில் இது உதவியாக இருக்கும். உதாரணத் துக்கு ''மண்ணும் சொல்லும் மூன்றாம் உலககவிதைகள்'' என்னும் புத்தகத்தை எடுத்துக் கொள்வோம்.

ஜுவனெல் புக்கானெயின்
'நமது அன்புக்கரங்கள்
எல்லா இடங்களிலும் மண்ணைத் தோண்டி
எடுக்கும்
நமது வெற்றி வேர்வை நிலத்துக்கு நீராகும்
நம் கடும் உழைப்பு மண்ணுக்கு உரமாகும்'

போன்ற கவிதை வரிகள் களப்பணியில் ஏற்படும் சோர்வை மறக்க உதவும்.

ஒனெஸிமோ ஸில்வெய்ராவின்
'முழக்கமிட்டு முழக்கமிட்டுக் கிறங்கிப்போன நாங்கள்
தொடுவானத்தைக் கறுக்கச் செய்வோம்'

என்ற கவிதை வரிகள் கொள்கைப்பிடிப்பு நிலைக்கு ஒரு கட்டுறுதியான எடுத்துக்காட்டு. சமூக விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தும் சமூகப் பணியாளரின் மனநிலை இவ்வரிகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

அகஸ்ட்டினோ நேட்டோவின்
'வாழ்ந்தே தீரவேண்டுமென்று
தெருக்களில் நான் நடக்கின்றேன்'

என்ற கவிதை வரிகள் சமூகப்பணியாளருக்கு உற்சாக மூட்டும் ஒரு காரணியாக அமைய வாய்ப்புண்டு.



படிப்பகம்

www.padippakam.com

ஃபெர்னாண்டெஸ் டி ஒலிவெய்ரோ மரியோ அந்தோனி யோவின்

> 'நனவாக்கப்பட வேண்டிய
> நம்பிக்கை கீதத்தை உனக்கு நான் பாடிக்காட்ட வேண்டும்'

என்ற கவிதை வரிகள். அறிவுரை (ஆலோசனை) வழங்கும் சமூகப்பணியாளரின் மனநிலை இவ்வரிகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

சுந்தர ராமசாமியின் ''பல்லக்குத் தூக்கிகள்'' மனச்சிதைவு ஆய்வு மையத்தின் வாடிக்கையாளர்களால் நாடகமாக நடிக்கப்பட்டிருப்பதும், உளவியல் மருத்துவர் ருத்ரன் அவர்களின் 'இனி' நாடகமும் நம்பிக்கையூட்டுவதாக இருக்கின்றன. ராஜம்கிருஷ்ணன், கு. ப. ரா., க.நா.சு., தி. ஜானகிராமன், ஜெயகாந்தன் போன்ற சில இலக்கியவாதிகளின் படைப்புகள் மட்டும் சமூகப் பணியாளர்களுள் சிலருக்குத் தெரிந்திருக்கின்றன. மற்றபடி பரவலான இலக்கியப் பரிச்சியம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் இலக்கியப் பரிச்சயம் இருந்தால் தான் இலக்கியத்தை ஒரு சிகிச்சை முறையாகக் கையாள ஏதுவாக இருக்கும். சீனத்தில் மாவோவின் போதனைகள் உளவியல் மருத்துவச் சிகிச்சையின் ஒரு பகுதியாகும். நம் நாட்டில் புத்தகங்களைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் முறை இன்னும் வரவில்லை என்பது சமூகப் பணியாளர்கள் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. துறையில் பட்டம் பெற்று மனநலக் காப்பகத்தில் சமூகப் பணியாளராக இயங்கி வரும் திரு பு. ஜெயச்சந்திரன் தனிப்பட்ட முறையில் தன் சொந்த முயற்சியில் சமூகத்துக்கு பயனளிக்கும் வகையில் அப்பப்பொழுது நிகழ்ச்சிகளை நடத்திவருகிறார். ஓர் உளவியல் நூலுக்கும் வலிப்பு நோய்பற்றிய நூலுக்கும்



படிப்பகம்

ஆசிரியர் இவர். இரண்டும் தமிழ் நூல்கள். கூர்மையான கணிப்புத் திறனும் பரவலான புத்தகப் பரிச்சயமும் கொண்டவர் இவர். இவரைப் போன்ற, துறையில் பட்டம் பெற்ற சிற்சிலரே துறைக்கு வளம் சேர்ப்பவர்களாக இருக்கிறார்கள். மேலும் சில உதாரணங்களைச் சொல்ல வேண்டுமானால் குழந்தைகள் நல நிறுவனத்தைச் சார்ந்த திருமதி கிரிஜா குமார்பாபு, லயோலா கல்லூரியைச் சார்ந்த முனைவர் உதயா மகாதேவன் முதலியவர்களைக் குறிப் பிடலாம். துறையில் பட்டம் பெற்று, சாதனையாளர்களாகத் தங்களை வெளிக்காட்டிக்கொள்ளும் நிறைய வெத்து வேட்டுகளைப் பார்த்துச் சலித்த எனக்கு வேறு யார் பெயரும் சட்டென்று நினைவுக்கு வர மாட்டேன் என்கிறது. எனக்குத் தெரியாமல் துறைசார்ந்த சிறந்த சமூகப்பணியாளர்கள் இன்னும் சிலர் இருக்கலாம். ஒருவருக்கு எல்லோரையுமேயா தெரிந்துவிடும்? தொண்டு நிறுவனம் என்ற பெயர் வைத்துக்கொண்டு தொண்டே செய்யாத சில நிறுவனங்களும் சென்னையில் இருக்கின்றன. இதையும் நான் சொல்லியாக வேண்டும்.

பொதுவாக பாரதத்தில் அலுவலங்களில் பணிபுரிகிறவர் களிடையே (முதுநிலைப் பட்டதாரிகள் உட்பட) ஒரு குமாஸ்தா மனநிலை நிலவிவருவதைக் காணலாம். இதற்கு நம் சமூகப்பணியாளர்களும் விதிவிலக்கல்ல. ஓர் உதவியை ஒரு வாடிக்கையாளருக்கு வழங்க ஐந்து அல்லது பத்து நிமிடமாகும். நம் குமாஸ்தா-சமூகப்பணியாளர்கள் உதவிகள் வழங்குவதைப் பதிவுசெய்ய முதலில் ஒரு பதிவேட்டைத் துவக்கிவிடுவார்கள். அட்டவணை போன்ற கோடுகள் போடுவார். (நல்லவேளையாகக் கோலங்கள் வரைவதில்லை.) பிறகு டோக்கன்கள் வழங்குவார்கள். உதவி பெறவிருப்பவர்களைப் பிச்சைக்காரர்கள்போலத் தரையில் வரிசையாக உட்காரச் சொல்வார்கள். ஒரு நேரத்தைக் குறிப்பிடுவார்கள். உதவி பெறுபவரின் பெயர் விலாசம் நிறுவனம் வழங்கியிருக்கும் குறியீட்டு இழவு எண் போன்றவற்றைச் சாவகாசமாகப் பதிவேட்டில் எழுது

வார்கள். சவஊர்வலம் போலப் பணி மெதுவான கதியில் நடக்கும். பணிநேரம் அதற்குள் முடிவடைந்துவிடும். அப்படியானால் உதவிபெறவிருப்பவர் அடுத்த நாள் வரவேண்டியிருக்கும். உதவியின் பெறுமானம் முப்பத்தைந்து ரூபாயாக இருந்தால் உதவிபெறுகிறவர் இதன்பொருட்டுச் செய்யும் செலவு —பேருந்துக் கட்டணம், காப்பிச் செலவு இத்தியாதி — பத்து முதல் பதினைந்து ரூபாய்வரை ஆகிவிடும். காத்திருத்தலில் ஏற்படும் மனஉளைச்சலுக்கும் நேர விரயத்துக்கும் இந்தக் குமாஸ்தாக்கள் எந்த விதத்தில் ஈடுகட்டப் போகிறார்கள் ? இன்றைய ரேஷன் கடைகளை எடுத்துக்கொள்வோம். மண்ணெண்ணெய் வாங்கக் கடைக்குச் சென்றால் மதியம் வரச்சொல்வார்கள். மதியம் கடை திறக்க வேண்டிய நேரம் மணி மூன்றரை. ஆனால் நாலரை மணிவாக்கில் தான் கடை திறப்பார்கள். மண்ணெண்ணெயை வாங்கி வர ஐந்தரை மணி ஆகிவிடும். ஒரு முழு நாள் விரயம். இதே ரீதியில்தான் நமதருமை சமூக நல நிறுவனங்களின் செயல்பாடுகளும் இருக்கின்றன. நிறைய இழுத்தடிப்புகள். உதவியை உடனே செய்ய மாட்டார்கள்.

குழு அமைப்புகளை (clique formation) அனைத்து நிறுவனங்களிலும் காணலாம். தலைமைச் சமூகப்பணியாளரின் குழுவைச் சேர்ந்தவர்கள் பாக்கியவான்கள். இவர்களுக்குப் பிரத்தியேக சலுகைகள் கிடைக்கும்.

தொண்டு நிறுவனங்கள் பரத்தையர் இல்லங்கள் அல்ல, ரகசியமாகச் செயல்பட. ஓர் உதவி ஒரு நிறுவனத்தில் கிடைக்கிறது என்று தெரிந்தால் அநேகர் வரத்தான் செய்வார்கள். ‘‘இங்க ஒதவி செய்றாங்கன்னு ஒங்கிட்ட யார் சொன்னா ? கூட்டி வா அவங்களை’’ என்று கர்ஜிப்பதில் எந்த ஓர் அர்த்தமும் இல்லை. இதற்குப் பேசாமல் தொண்டு நிறுவனங்களை மூடிவிடலாம். மக்கள் ஏழைகளாகவே இருக்கட்டும்; இவர்களிடம் வந்து அவமானப் படுவதைவிட வறுமை எவ்வளவோ மேல். சில மாதங் களுக்கு முன்பு க்ரீம்ஸ் சாலை வழியே களப்பணிக்குச்

சென்று கொண்டிருந்தேன். ஏதோ ஒரு கம்பெனி வாசலில் அன்னதானம் வழங்கிக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு கூட்டம் என்கிறீர்கள்! சில நாட்கள் முன்பு ஒரு பத்து வயதுப் பையன் இரண்டு குச்சி ஐஸ்களைப் பிடித்துக் கொண்டு அம்மணமாகத் தெருவில் ஓடிக் கொண்டிருப்பதை என் வீட்டின் அருகில் பார்த்தேன். ஏழைகளுக்குச் செருப்பு கூட ஓர் ஆபரணம்தான். விசேஷங்களுக்கு மட்டும்தான் அணிந்து செல்வார்கள். நாட்டில் ஏழ்மை இவ்வளவு தலை விரித்தாடுகிறது. இதெல்லாம் தொண்டு நிறுவனங் களுக்குத் தெரிந்திருக்கிறதா என்று தெரியவில்லை. ஒன்று தொண்டு செய்ய வேண்டும். முடியாத பட்சத்தில், நிறுவன நெறிமுறைகள் என்த கோளாறு பிடித்த சடங்குகள் (neurotic rituals of procedures) உதவி தரத் தடையாக இருக்கும் பட்சத்தில், குறைந்தது தன்மையுடனாவது பதில் சொல்லி அனுப்ப வேண்டும். அல்லது தொண்டு என்னும் பாசாங்கை நிறுத்திக்கொண்டு நிறுவனங்களை நிம்மதியாக மூடிவிட வேண்டும். அது மிகவும் உத்தமமான செயல். அல்லது ஏற்கனவே சொல்லப்பட்ட பாரமவுண்ட் ஓட்டல் சிப்பந்திகள் போன்ற அன்புள்ளங்களுக்குப் போது மான அளவு முறைசாராக் கல்வி புகட்டிச் சமூகப்பணியாளர் களாக நியமித்துவிடலாம்.

சமூகப்பணியாளர்களுக்கு நிறைய கசப்பான அனுபவங்கள் ஏற்படுவதுண்டு. ஒரே ஒரு சம்பவம் மட்டும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 31-12-91 அன்று என் வாடிக்கையாளரான பதினெட்டு வயதுப் பெண்ணை எழும்பூர் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந் தேன். பெண் முறைப்படி வரிசையில் தரையில் அமர்ந்து கொண்டாள். தலைமை மருத்துவர் வந்தார். அவரிடம் நான் என்னை ஒரு சமூகப்பணியாளர் என்று அறிமுகப் படுத்திக்கொண்டு என் வாடிக்கையாளரின் பார்வை பரிசோதிக்கப்படும் போது நான் உடன் இருக்கலாமா என்று அனுமதி கேட்டேன். மருத்துவருக்கு ஏன் அத்தனை கோபம் வந்தது என்று தெரியவில்லை. ‘‘எங்கள் மருத்து

வத்தில் நம்பிக்கை இல்லையென்றால் நீங்கள் தனியார் மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள். யார் அந்தப் பெண் ? கூப்பிடுங்கள்'' என்று இரைந்தார். இவ்வளவுக்கும் நான் அவரிடம் எந்தச் சலுகையையோ முன்னுரிமையையோ கேட்டிருக்கவில்லை. இதுதான் சமூகப்பணியாளர்களுக்கு பிற துறையினர் தந்திருக்கும் மரியாதை. சம்பவம் நடந்த நேரம் காலை 10-45. தலம் அறை எண் 31. கண்ணாடி பரிசோதனை அறை.

நாட்டில் பொதுப்பணியில் நடந்துகொண்டிருக்கும் அராஜகங்களைப்பற்றி நிறையவே எழுதலாம். அஞ்சல் நிலையங்கள் முதல் பேருந்துகள் வரை நிறைய முறை கேடுகள் நடந்துகொண்டுதானிருக்கின்றன. இந்தக் கட்டுரையைத் திசை திருப்ப விரும்பாததால் நான் இவற்றை இதில் சேர்க்கவில்லை.

சமூகப்பணியாளருக்கு பல துறைகள்பற்றிய அறிவு இருக்க வேண்டும் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இதன் அடிப்படையில் எனக்குச் சமீபத்தில் இரண்டு ஏமாற்றங்கள் ஏற்பட்டன. சம்பவம்—1 : 7-1-'92 அன்று மதியம் ஒன்றரை மணிவாக்கில் புறநகர் ரயிலில் களப்பணிக்காக கும்முடிப்பூண்டிக்குச் சென்றுகொண்டிருந்தேன். 'முதியோர் கல்வித் திட்டப் புத்தகங்கள் நாலு ஏழே ரூபாய்' என்று கூவி ஒருவர் ரயில் பெட்டியில் புழங்கிக் கொண்டிருந்தார். ரூபாய் கொடுத்து வாங்கினேன். நான்கு புத்தகங்களும் மதப்பிரசாரப் புத்தகங்களாக இருந்தன. சில மேற்கோள்கள் இதைத் தெளிவுபடுத்தும்.

புதிய நம்பிக்கை-1
[முதியோர் கல்வித் திட்டம்]

> மேற்கொள் :
> படம் காட்டு.
> இது படம்.
> அப்பா, இது இயேசு படமா ?
> ஆம். இது இயேசு படம்.
> மாமா, இது மடமா ?
> ஆம். இது மடம்.

www.padippakam.com

இடம் இல்லை.
அம்மா. இயேசு பாட்டு பாடு.

(மத்தேயு 1:20-24)

புதிய-நம்பிக்கை—2 [முதியோர் கல்வித் திட்டம்]
மேற்கோள் :

இது அவன் வலை இல்லை.
இது அப்பா வலை இல்லை.
இது மாமா வலை.
இது அணில் வால்.
இது மான் வால்.
அம்மா வா.
அப்பா வா.
அவன் இயேசு பாட்டு பாடுவான்.
அவன் ஆகமம் படிப்பான்.
அப்பா, ஆகமம் படி.

(லூக்கா 5:1-6)

புதிய நம்பிக்கை—3 [முதியோர் கல்வித் திட்டம்]

மேற்கொள் :

கடல் பக்கம் மீன் உண்டு.
கொக்கு மீன் பிடிக்கும்.
நரி மீன் கடிக்கும்.
சன்னல் மீது பிரம்பு.
பாப்பா, பிரம்பு பார்.
அப்பா, பிரம்பு கொண்டுவா.
பாவத்தின் பலன் சாவு.
பாவிக்கு சாவு இரண்டு.
இயேசுதான் வாழ்வு.
பாவி, இயேசுவிடம் வா.

(ரோமர் 6: 23)

புதிய நம்பிக்கை—4 [முதியோர் கல்வித் திட்டம்]



படிப்பகம்

www.padippakam.com

மேற்கோள் : எருசலேம் லேம் லே
லேம் லே லே
பரிசுத்த நகரம் நகரம் ந
நகரம் ந ந

......................................................................

ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டவர்கள்

இப்புத்தகங்களை வெளியிட்ட மானுடத் துரோகிகள் : லிட்டரஸி இந்தியா டிரஸ்ட், 33 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 600 034.

சம்பவம்—2 : மே '92-ல் Psychology Slander Intuition என்ற புத்தகம் என் கவனத்துக்கு வந்தது. எழுதியவர்கள் Dr. Paul Brown in association with Steve Knight, Mike Whitehill and Danny Kishon. இவர்கள் லண்டன்காரர்கள். இவர்கள் உளவியலை ஆளுமைக் கணிப்புப் பரிசோதனை என்ற பெயரில் ஒரு Board Game தயாரிப்பதற்காகத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். உளவியலைக் கேளிக்கைக்குள்ளாக்கும் செயல் இது. இக்கணிப்பு முறையில் ஒரு பகுதியை என் மீதுபிரயோகித்துப் பார்த்ததில் கணிப்பு முறை முற்றிலும் தவறானது என்பது புரிந்தது. தங்கள் துணைவியார் தங்களைப் பிறப்பு உறுப்பு என்று உருவகித்துப் பார்த்தால் தங்கள் ஆளுமை இப்படிப் பட்டது; தங்கள் துணைவியாரைத் தாங்கள் முலைக்காம்பு களாக உருவகித்துப் பார்த்தால் அவரது ஆளுமை இப்படிப் பட்டது; நிறைய முலைக்காம்புகள் Salvation Army-யில் இயங்கி வருகின்றன போன்ற உளவியல் குப்பை. இப்புத்தகம் இந்தியச் சூழலுக்கு ஏற்ற புத்தகமே அல்ல. ஆனால் 'இந்தியாவில் மட்டும் விற்பனைக்கு' என்று குறிப்பிட்டு ஒரு வடக்கத்திய வெளியீட்டகம் இப் புத்தகத்தை இந்தியாவில் புகவிட்டுப் புண்ணியம் கட்டிக் கொண்டிருக்கிறது. உளவியல் முனைவர் பட்டம் எப்படி யெல்லாம் சீரழிகிறது பாருங்கள். நிறைய விஷயங்களை அறிந்துகொள்ளும் ஆவலில் சமூகப்பணியாளரின் சொந்த நேரம் இப்படியெல்லாம் வீணடிக்கப்படுவதும் நேர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கொடுமை. புத்தகங்களின் தலைப்புகள் நம்மை ஏமாற்றி விடுகின்றன.

இந்தக் கட்டுரையின் ஒரே நோக்கம் சமூகப்பணியைத் துறைசார்ந்த பட்டதாரிகள் மட்டுமே செய்ய முடியும் என்ற ஏகபோகத்தின்மீது சமர்தொடுப்பதுதான். M.Com, MPhil படித்த ஓர் இளம்பெண் ஓர் இன்ஷுரன்ஸ் கம்பெனியில் தட்டச்சுப்பணி செய்துகொண்டிருக்கிறாள். எஸ், எஸ். எல். ஸி., +2 படித்தவர்களும் தட்டச்சுப்பணி செய்து கொண்டிருக்கிறார்கள். நம் சூழலில் வேலைக்கும் படிப்புக் கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ?

என் நினைவு சரியென்றால் சென்னையில் சமூகப்பணி முதுகலைப் பட்டப்படிப்பு 1963-ல் ஆரம்பிக்கப்பட்டது. அப்படியானால் அதற்கு முன் நாட்டில் சமூகப் பணியாளர் களே இருக்கவில்லையா என்ன ?

மக்களிடையே போதுமான அளவு கல்வி அறிவு (நான் பட்டப் படிப்புகளைச் சொல்லவில்லை) இல்லாதவரை, சமூகத்தில் பொருளாதாரரீதியில் அதலபாதாள ஏற்றத் தாழ்வுகள் இருக்கும்வரை சமூகப்பணி ஓர் அத்தியாவசியத் தேவையாக இருக்கும். எந்த விதத்திலும் வேறுபாடுகள் அற்ற சமுதாயம் உருவான பிறகு (!) சமூகப்பணி ஓர் அனாவசியம் என்று ஆகிவிடும். அவரவர் வாழ்க்கையைச் சமூகப்பணியாளரின் இடையீடு இல்லாமலேயே அவரவர்கள் நடத்திக்கொள்ள முடியும்.உளவியல் மருத்துவச் சமூகப்பணி மட்டும் தொடர்ந்துகொண்டிருக்கும். ஏனென்றால் சமூக நியதிகளின் முரண்பாடுகள் எந்தக் காலகட்டத்திலும் பிறழ்வுகளை ஏற்படுத்தவல்லவை.

இந்தக் கட்டுரையை எவ்வளவு முயன்றும் கோர்வை யாக எழுதமுடியவில்லை. எனவே ஒவ்வொரு பத்தியையும் ஒரு தனி அம்சமாக எடுத்துக்கொண்டு படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னால் ஏற்படுத்த முடியாமல்போன கோர்வையை ஒரு தெளிந்த வாசகரால் நிச்சயம் ஏற்படுத்திக்கொள்ள முடியும். □



படிப்பகம்

www.padippakam.com

# ஆத்மன் ஆலோசனை மையம்

கடை எண் 37

**சாந்தி காம்ப்ளெக்ஸ்**

*26/3 ரங்கநாதன் தெரு, தி.நகர்*

*சென்னை-600 017.*

இந்த எந்திர யுகத்தில் உண்மையான அர்த்தமுள்ள உறவுக்கான சாத்தியங்கள் குறைவாகவே ஆகிக்கொண்டிருக்கின்றன, 'தன்னைப் புரிந்து கொள்வதுதான்' வாழ்வின் இலக்கு என்று தத்துவங்கள் சொல்லிக்கொண்டிருந்தாலும் அவரவர் சொந்தத் தேவைக்கான ஓட்டத்தில் தன்னையே நிதானமாகத் திரும்பிப் பார்த்துக்கொள்ள, தன்னைப்பற்றி யோசிக்க, தெரிந்து கொள்ளச் சில கணங்களைக்கூட நம்மால் ஒதுக்க முடிவதில்லை. நம்மைப் புரிந்துகொண்டு வாழ்க்கையைப் பழக நம்மைப் பிரதி பலிக்கும் உறவுகளைப் புரிந்துகொள்வது அவசியம். ஆனால் அநேகருக்கு உறவுகள் எப்போதும் சரியாக அமைந்து விடுவதில்லை. கொஞ்சம் கவனமாக இருந்தால், உறவில் ஏற்படும் நெருடலை, தடங்கலை, விரிசலைச் சமாளிக்க முடியும். ஆனால் நம்மில் பலருக்கு அடிப்படையிலேயே பிரச்சினை இருக்கிறது. பத்து வருடம் பார்த்துப் பழகியிருந்தாலும் நமது அந்தரங்க மனச்சிக்கல்களையோ குறைகளையோ, பயங்களையோ அல்லது நாம் ஒத்துக் கொள்ளாமல் ஒதுக்கும் எதிர்மறை உணர்வுகளையோ பிறரிடம் பகிர்ந்துகொள்வதில் தயக்கம், சங்கடம் இருக்கிறது. இப்படிப் பொதுவாக நமது எல்லோருக்குள்ளும் மனதளவில் பிறரிடம் சொல்லக் கூச்சப்பட்டு வெளிப்படுத்தாத பகுதி...இருண்ட பகுதி நிறையவே இருக்கிறது. அந்த நிழலான பகுதியை உணர்ந்து, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய எழுந்த ஒரு சிறு முயற்சியே ஆத்மன் ஆலோசனை மையம்.

உங்கள் பிரச்சினை ஆரம்பிக்கும் இடம் நீங்களாகவோ, அலுவலகமாகவோ, வீடாகவோ, தாம்பத்திய உறவாகவோ



படிப்பகம்

www.padippakam.com

இருக்கலாம். சகமனிதனுடன் எப்போதும் ஒத்துப்போக முடியாதவராகத் தாங்கள் இருக்கலாம். மதுவின் கோரப் பிடியிலிருந்து நழுவ முடியாதவராக இருக்கலாம். ஏன், வாழ்க்கையில் நடுக்கமுற்று அடிக்கடித் தற்கொலை எண்ணம் கொள்பவராகக்கூட இருக்கலாம். அல்லது தீவிர மனநோய்க்குறிகள் உள்ளவரின் உறவினராகத் தாங்கள் இருக்கலாம்.

இப்படியாக இருப்பது தப்பு என்றோ குறை என்றோ மனம் குமைந்து கொண்டிருக்கத் தேவையில்லை. எந்த உணர்வும் தன்னளவில் உண்மையானதே. அனுபவிக்கப்பட வேண்டியதே. உங்கள் பிரச்சினையின் தன்மை எதுவாக இருந்தாலும் சரி, எங்களை முழு நம்பிக்கையுடன் அணுகுங்கள். உங்கள் பிரச்சினைகளை ஒரு நண்பனின் அக்கறையுடன் புரிந்து கொள்ள, பகிர்ந்துகொள்ள சிநேகச் சிரிப்புடன் எப்போதும் காத்திருக்கிறோம். மனமிருந்தால் நாம் மாற முடியும், வளர முடியும் என்பதில் எங்களுக்கு அசாத்திய நம்பிக்கை உண்டு. உங்களுக்கும்தானே? இனி உங்களுக்காக....

**ஆத்மன் ஆலோசனை மையம்**
ஆலோசனை நேரம்
மாலை 5-30 முதல் 7-30 வரை
ஞாயிறு விடுமுறை

www.padippakam.com

குறிப்பு : PSI என்ற நூல் பற்றிய குறிப்பு 'வாக்கு மூலம்' வெளியீட்டு விழாக் கூட்டத்தில் புத்தகத்தின் மதிப்புரையில் கோபி கிருஷ்ணனால் குறிப்பிடப்பட்டது, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் மூன்றில். விழா நடைபெற்ற நாள் 28-10-92.

படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் குறிப்புகள்:

படிப்பகம்

www.padippakam.com

# பிழைத் திருத்தம்

| பக்கம் | பத்தி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 1 | சமூகப் பணியாளர் | சமூகப்பணியாளர் |
| 5 | 1 | வகிப்பதற்கு | வகிப்பதற்குச் |
| 9 | 1 | ஒரு | ஓர் |
| 11 | 1 | என்று | என்று. |
| 11 | 3 | Conncelling | Counselling |
| 12 | 1 | Daic | Dale |
| 12 | 2 | Jaejah Non | Jae Jae Noh |
| 12 | 2 | Richarvd Jeffekies | Richard Jefferies |
| 14 | 1 | இவர்களை யெல்லாம் | இவர்களெல்லாம் |
| 19 | 3 | நாட்டில | நாட்டில் |
| 20 | 2 | தனிமனிந | தனிமனித |
| 21 | 1 | Charm air | arm chair |
| 23 | 3 | ஒருமைபாட்டுப் | ஒருமைப்பாட்டுப் |
| 28 | 2 | Prhb | Prop |
| 29 | 2 | போன்ற எளிமையான | எளிமையான |
| 33 | 4 | டுெத்திருக் கின்றன. | கொடுத்திருக் கின்றன. |

படிப்பகம்